GOKULAM

கோகுலம்

ஜனவரி 2007
80 பக்கங்கள்

குழந்தைகளின் குதூகலம்!

விலை ரூ.8/-



உங்கள் குழந்தைகளின் வளமான எதிர்காலத்திற்கான ஆங்கில பயிற்சி

ALOHA English Smart

For ages 6 - 14

- ஆங்கிலத்தில் தன்னம்பிக்கையுடன் சரளமாக மற்றவர்களுடன் பேசவும்
- குழந்தைகளின் ஆங்கில எழுத்துத்திறனை வளர்க்கவும்
- மற்றவர்களுடன் எளிதான ஆங்கில சொற்களில் தெளிவாக பேசவும்
- குழந்தைகளின் கற்பனைத்திறனை எழுத்தின் மூலமாக வெளிக்கொண்டுவரவும்
- ஆங்கிலத்தில் குழந்தைகளின் முழுத்திறமையையும் புத்திசாதுர்யத்தையும் வெளிக்கொண்டுவரவும்



Become our Franchisee & join the successful ALOHA family

A / c Class Rooms
Small Batchs
Experienced
Faculties

ALOHA INDIA

(A division of K K Academy (P) Ltd)

An ISO 9001 : 2000 Company


'Deccan Heritage', New No. 521, II Floor, Anna Salai, Nandanam,
Chennai - 600 035, Tamil Nadu, India. Ph : 24361144 / 9940299992
Email : info@alohaindia.com Web : www.alohaindia.com

ஜனவரி 2007 மலர்: 24 இதழ்: 12


உயிர்களிடத்தில் அன்பு வேணும் – தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும் – பாரதியார்

கோகுலம்

பொங்கல் கலை நிகழ்ச்சி!



உள்ளே... போட்டி மழை!





கல்கி

கோகுலம்

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட்லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர் :
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
எக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர்:
சீதா ரவி

வடிவமைப்பு :
எஸ். ஸ்டீஃபன்
பி.ஆர். ராஜன்
எம். மோகன்
ச. கார்த்திகேயன்

தொலைபேசி :
2225 1522 / 2225 0623
2225 1324

தொலைநகல் :
044 - 22251021

மின்னஞ்சல் :
ஆசிரியர் குழு :
gokulam@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com

சந்தா விவரம் :
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ.96/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : 25 யு.எஸ். டாலர்

Bharathan Publications
Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

குழந்தைகளின் குதூகலம்!

அன்புள்ள உங்களுக்கு...

அனைவருக்கும் புத்தாண்டு மற்றும் பொங்கல் நல்வாழ்த்துகள்.

நல்ல நாள் என்பது என்ன? மற்ற நாட்களைப்போல இருபத்து நான்கு மணி நேரம்தானே? அன்று மட்டும் முப்பது மணியா இருக்கிறது? பிறகு எதற்கு நல்ல நாட்களென வகுத்து நல்ல செயல்களைச் செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள்?

நல்ல நாட்கள் என்பவை நமக்கு நாமே உற்சாகப்படுத்திக் கொள்வதற்கும் தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்வதற்கும் ஏற்படுத்தியவை. புத்தாண்டுக்கு ஒரு உறுதிமொழி எடுக்கிறோம். அதைக் கடைப்பிடிக்க வேண்டுமென மனத்தில் சொல்லிக் கொண்டு, செயலில் இறங்குகிறோம்.

இனிய நாட்கள்!

கடுமையாக உழைத்து வெற்றி பெறுகிறோம் அல்லவா? இப்படி மனத்திற்கு உற்சாகத்தை அளிப்பதற்காக ஏற்படுத்தியவைதான் நல்ல நாட்கள்.

ஒவ்வொரு நாளும் நல்ல செயலையே நினைத்து அதை முடிக்கும் எண்ணத்துடன் செயல்பட்டால் எல்லா நாட்களும் இனிய நாட்கள்தான். சரிதானே?

கோகுலம் வெள்ளி விழா ஆண்டு தொடங்கப் போகிறது. மேலும் பல புதிய பகுதிகளுடன் உங்களைச் சந்திக்கப் போகிறது உங்கள் பத்திரிகை. அது குறித்த அறிவிப்பு வேறு பக்கத்தில். தயாராக இருங்கள்!



அன்புடன்
கோகு

புத்தாண்டை ஜாலியா கொண்டாட ஒரு விளையாட்டு வேணுமா?


எலி கேசவனுக்கு 'ஹெல்ப்' பண்ணணுமா?

உருண்டை முக ஒய்யாரின்னா யாருன்னு தெரியணுமா?

நேருவையும், பாரதியாரையும் வரையணுமா?

உடனே போங்க 'கோகுலம் தீம் பார்க்'


பக்கங்கள்: 33 to 48




கதை : வாண்டுதாசன்
படம் : பிள்ளை
5
சிங்கராஜா நரசுவின் தலைமையில் அத்தனை விலங்குகளும் வருவதைக் கண்டதும்...
மாஸ்டர், என்ன ஒரு கூட்டமே வருது?
விநோவை வழியனுப்ப வர்றாங்க!
எனக்கு அப்படித் தோணலை.
அம்மா, இவங்கதான் என்னை வளர்த்த ராஜா, ராணி.
வணக்கம். என் பெயர் நரசு.
என் பெயர் ஜீயோ! எங்கள் கிரகத்தின் தலைவன்.
விநோவைக் கூட்டிட்டு உடனே கிளம்பிடுவீங்கதானே?
ஏன் கேட்கறே?
நந்து மாமாவுக்குச் சந்தேகம். நீங்க இங்கே என்னமோ செய்யப் போறீங்களாம்!


அது உண்மைதான் விநோ. நாங்கள் இங்கே வந்தது. உன்னைத் தேடிட்டு மட்டுமில்லே...
இந்த இடத்தையே சொந்தமாக்கத்தான்!
எங்கள் கிரகம் மிகச் சிறியது. எங்கள் எண்ணிக்கை அதிகமாயிட்டதால இட நெருக்கடி. அதனால இங்கே கொஞ்சம் பேர் குடியேறப் போறோம்.
அதுக்கு நாங்க அனுமதிக்க வேண்டாமா?
உங்க அனுமதி எதுக்கு? நாங்க முடிவு பண்ணிட்டோம். இங்கே சில மாற்றங்களோடு குடியேறப் போறோம்.
மாற்றமா? என்ன மாற்றம்?
பாதி மரங்களை அழித்து எங்க கிரகம் மாதிரியே ஒரு சூழலை ஏற்படுத்தப் போறோம்.


நாங்க மறுத்தா என்ன செய்வீங்க?
உங்களை அழிச்சுட்டு எங்கள் நோக்கத்தை நிறைவேற்றுவோம்.
நான் சந்தேகப்பட்டது சரியாப் போச்சா?
அப்பா, நீங்க பேசுறது கொஞ்சமும் நியாயமில்லே.
விநோ நீ எங்கள் பக்கம் வந்துடு.
முடியாது. இந்தக் காட்டை அழிக்க நீங்க முடிவு பண்ணிட்டா இவங்களோடு சேர்ந்து உங்களை எதிர்க்க நானும் தயார்.
அடுத்த இதழில் முடியும்



விளையாட்டு!

கோகுலத்துக்கு நான் புதிய அறிமுகம்! பெயர் விளையாட்டு போன்ற சுவாரஸ்யமான அறிவு விளையாட்டுகள், மனத்தை கவர்ந்தன. எல்லாவற்றையும் விளையாடி மகிழ்ந்தேன்.

- ஜே.ஜே.அனுசா, ஐந்தாம் வகுப்பு, புனித அந்தோணியார் துவக்கப் பள்ளி, விசுவாசபுரம், கொம்மடிக்கோட்டை

ஆவல்!

வள்ளியப்பாவுக்கு வணக்கம் கட்டு



பாதுகாக்கும் பொக்கிஷம்!

ரையைப் படித்தேன். சுவையாக இருந்தது. இதுவரை நான் அழ.வள்ளியப்பா பாடல்கள், கவிதைகளைப் படித்தது இல்லை. இந்த இதழில் வெளியான 'அப்பு சாமி குப்புசாமி' படித்ததும் அவரது மற்ற பாடல்கள், கவிதைகளை உடனே தேடிப்பிடித்துப் படிக்கவேண்டும் என்ற ஆவலை ஏற்படுத்தியது.

- எம்.சரவணன், வீரணம்

பொக்கிஷம்!

கடந்த கால உலகின் அம்சங்களை எளிய நடையில் புகைப்படங்களுடன் இடம் பெறச் செய்யும் ''நேற்றைய உலகம்'' படிக்க மட்டுமின்றி, பாதுகாத்து வைக்கவும் வேண்டிய ஓர் அரிய பொக்கிஷம்.

- வி.வேல்முருகன், முத்தம்பட்டிகேட்

சல்யூட்!

'தெரிந்த தலைவர்; தெரியாத தகவல்'- பகுதியில் எங்களுக்கெல்லாம் நன்கு தெரிந்த நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் பற்றி இதுவரை தெரியாத பல தவகல்களை அளித்த கோகுலத்துக்கு ஒரு ராயல் சல்யூட்!

- கே.கஸ்தூரி, வேலூர்-6

எங்களுக்கும் வாய்ப்பு!

மாற்றங்கள் பல இருந்தும் சிறுகுறையும் இல்லாத புதிய கோகுலத்தை படித்ததில் மகிழ்ச்சி. ஆனால் இதிலாவது கல்லூரி மாணவர்களின் படைப்புகளை வரவேற்கலாமே! நாங்களும் மாணவர்கள்தானே!

- கே.கே.சந்தனக்குமார், உத்தமபாளையம்

(எழுதியனுப்புங்கள். சிறப்பாக இருந்தால் வெளியிடப்படும் - ஆர்.)



ஹாய் பிரண்ட்ஸ்! ஹாப்பி நியூ இயர்! இந்த மாதம் கவர் ஸ்டோரி என்னவென உங்களுக்கு முன்பே தெரிந்திருக்கும். ஆம்! 2006 கோகுலம் சுழல் கோப்பையை வென்ற பள்ளியைப் பற்றிய சிறப்புச் செய்தியைத் தான் பார்க்கப் போகிறோம்.


"கோகுலம் தந்த புத்தாண்டுப் பரிசு!"

கடந்த ஆண்டு ஜனவரியில் சுழல் கோப்பைக்கான பந்தயம் தொடங்கியது முதலே, ஆலங்கொம்பைச் சேர்ந்த 'அழகிரி சுரேஷ் அரசு உயர்நிலைப் பள்ளி'யும், மாதேசம்பாளையம் 'சிவபாக்கியம் முத்துசாமி மெட்ரிக்' பள்ளியும் சமநிலையில் முன்னேறிக் கொண்டிருந்தார்கள். டிசம்பர் மாதம் வரை எந்தப் பள்ளி ஜெயிக்கப் போகிறதெனத் தெரியாமலே இருந்தது. ஏனெனில் அந்த அளவுக்கு சமமாக இருந்தார்கள். ஆனால் முடிவில் **'சிவபாக்கியம் முத்துசாமி மெட்ரிக் பள்ளி** மாணவ, மாணவிகள் ஜெயித்து, கோப்பையைக் கைப்பற்றினார்கள்.

• பரிசளிப்பின்போது...



சுழல் கோப்பையுடன்,





• கலைநிகழ்ச்சி...



• மாணவர்களில் ஒரு பகுதியினர்...

சம்பிரமாக வீற்றிருந்தது 'சிவபாக்கியம் முத்துசாமி மெட்ரிக் பள்ளி.' மாணவர்களும், ஆசிரியர்களும் சிறப்பான வரவேற்பு அளித்தார்கள்.

''கோகுலம் சுழல் கோப்பை எங்கள் பள்ளிக்குக் கிடைத்த செய்தி அறிந்து அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. இதை மிகப் பெரிய கௌரவ மாக நினைக்கிறோம்'' என்று கூறி கைகுலுக்கினார் முதல்வர். ''நாங்கதான் உங்களுக்கு நன்றி சொல்லணும். வெறும் பாடங்களைச் சொல்லித் தரு வதுடன் கடமை முடிந்ததாக நினைக் காமல் மாணவச் செல்வங்களை ஊக் கப்படுத்தி அவர்களுடைய படைப்பு களைச் சேகரித்து அனுப்புகிறீர்களே'' என்றோம்.


பரிசளிப்பு விழாவுக்குச் சிறப்பான ஏற்பாடுகளைச் செய்திருந்தார்கள். கடவுள் வாழ்த்துடன் விழா ஆரம் பித்தது. ஆசிரியை வனஜா வரவேற் புரை நிகழ்த்தினர். சிறப்பு விருந் தினராகக் கலந்து கொண்ட ஓய்வு பெற்ற இராணுவ வீரர் திரு.மருது பாண்டியன் சுழல் கோப்பையை வழங்கினார். படைப்புகளை அனுப்பி, கோப்பையை வெல்ல காரணமாக இருந்த மாணவ, மாணவிகள் பத்துப் பேர் அதைப் பெற்றுக் கொண்டார்கள். அவர்கள் அனைவருக்கும் கோகுலம் சார்பாக தனித்தனியாகவும் பரிசுகள் வழங்கப்பட்டன.

பிறகு கலைநிகழ்ச்சிகள் ஆரம்ப மாயின. மாணவிகள் அழகாக நடன மாடினர். தவிர கராத்தே, சிலம்பு, யோகா, இசைக் கருவி வாசிப்பு போன்றவை அடங்கிய பல்சுவை நிகழ்ச்சியை நடத்தி அசத்திவிட்டனர்.

நாமக்கல் மாவட்டத்தில் உள்ள மாதேசம்பாளையத்துக்குப் பயண மானோம். இயற்கை எழில் சூழ்ந்த கிராமத்தில் விஸ்தாரமான இடத்தில்

இந்தப் பள்ளி 1996-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டுள்ளது. தற்போது ஐந்நூற்று நாற்பத்தைந்து மாணவர்கள்

இந்தப் பள்ளியில் நூலகராக இருப்பவர் ஆர்.யுவராஜ். இவர்தான் மாணவ, மாணவிகளை ஊக்கப்படுத்தி, அவர்களுடைய படைப்புகளைத் திருத்தி, தொகுத்து அனுப்புபவர். "கோகுலம் சுழல்கோப்பையினை எப்படியும் வென்று விட வேண்டும் என்று உறுதி கொண்டு செயல்பட்டேன். அதற்கான பலன் கிடைத்தது மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது. கோகுலம் தந்த இந்தப் புத்தாண்டுப் பரிசை அடுத்த வருடமும் நாங்களே தக்க வைத்துக் கொள்வோம்" என்றார்.



* ஆர்.யுவராஜ்

பயில்கிறார்கள். இவர்களில் நூறு பேரைத் தவிர மற்ற அனைவருமே அங்கேயே விடுதியில் தங்கிப் பயிலும் மாணவர்கள். இப் பள்ளியில் எல்.கே.ஜி. முதல் பத்தாம் வகுப்பு வரை உள்ளது.

"படிப்பு மட்டுமில்லாமல் தற்காப்பு கலையான கராத்தே, சிலம்பம் கற்றுத் தரப்படுகின்றன. இவற்றைக் கற்று, மாவட்ட அளவில் நடக்கும் போட்டி களில் கலந்து கொண்டு, மாணவர்கள் பல்வேறு பரிசுகளைப் பெற்றிருக் கிறார்கள்" என்ற முதல்வர், அந்த மாணவர்களை



* யோகா ...

அறிமுகம் செய்து வைத்தார்.

அந்தப் பள்ளி இருப்பது சிறிய கிராமத்தில். ஆனால் அந்த மாண வர்களின் திறமையோ நகரத்து மாணவர் களைவிட அதிகமாக உள்ளது. எல்லோ ருக்கும் வாழ்த்துக் கள் சொன் னோம்.

முதல்வரின் உரையாடலுக்குப் பின் ஆசிரியை பிருந்தா நன்றியுரை நிகழ்த்தினார். பிறகு மாணவர்கள் எங்களைச் சூழ்ந்து கொண்டு ஆர்வமாகக் கேள்விகளைக் கேட்டார்கள்.

சுழல் கோப்பையைப் பள்ளிக்கு பெற்றுத் தந்த மாணவ, மாணவியர் விவரம் :

1. எம்.யுவராஜ்
2. எஸ்.சுபாஷ்
3. ஆர்.ரஞ்சிதா
4. எஸ்.கௌதம்
5. பி.ஜானகி
6. சுகுமார்
7. ஆர்.அனிதா
8. எஸ்.மணி
9. எஸ்.கார்த்திகா தேவி
10. டி.யுவராஜ்

"அன்புள்ள ஜக்கு பகுதி மாறப் போகிறதே. எந்த மாதிரி கேள்விகளைக் கேட்பீர்கள்?"

"படக்கதைக்குக் கதைகளை அனுப்ப வேண்டுமானால் அதை எப்படி எழுத வேண்டும்?"

"எங்களது பாடம் சம்பந்தப்பட்ட பகுதியை கோகுலத்தில் ஆரம்பிப் பீர்களா?"

-இப்படி அடுக்கடுக்கான கேள்விகள்.

கோகுலத்தில் இன்னும் எந்த மாதிரியான பகுதி களைச் சேர்க்கலாம் என்ப தைப் பற்றியும் நிறைய ஆலோசனைகளைச் சொன் னார்கள். இதன்மூலம் அவர் களது ஆர்வம் புரிந்தது. அவர்களுடன் உரையாடியது மிகவும் பயனளிப்பதாக இருந்தது. சிறிது நேரமே இருந்தாலும் மிகவும் நெருக்கமாகிவிட்டார்கள். அரை மனத்துடனே விடைபெற்றுக் கிளம் பினோம்.

2007-ஆம் ஆண்டு சுழல் கோப் பையை உங்கள் பள்ளி வெல்ல, இப் போது முதலே படைப்புகளை அனுப் புங்கள். வெற்றி பெற அட்வான்ஸ் வாழ்த்துகள்!


• முதல்வர்

சேலம், அரசு ஆண்கள் மேனிலைப் பள்ளி மூன்றாம் இடத்தைப் பிடித்தாலும், அப்பள்ளியைச் சேர்ந்த எம்.செல்வகுமாரின் படைப்பு கள் கடந்த ஆண்டில் மட்டும் ஒன்பது வெளியாகியுள்ளன. அதேபோல மான்போர்ட் மெட்ரிக் பள்ளியைச் சேர்ந்த ஆர்.பிரிதர்ஷினியின் படைப்பு கள் ஐந்து வெளியாகியுள்ளன. இவர் களுடைய இந்த ஆர்வத்தை ஊக்கப் படுத்தும் விதமாக இருவருக்கும் கோகுலம் சார்பாக சிறப்புப் பரிசு அனுப் பப்படுகிறது.


• கராத்தே...

அட்டையில்...
சுழல் கோப்பையை
வென்ற மாணாக்கர்கள்

அட்டை மற்றும்
படங்கள் :
பொள்ளாச்சி சுந்தரம்


• சிலம்பம்...

2006-ஆம் ஆண்டின் சுழல் கோப்பைப் போட்டியில் முதல் ஐந்து இடங்களைக் கைப்பற்றிய பள்ளிகள் :

1. சிவபாக்கியம் முத்துசாமி மெட்ரிக் பள்ளி, மாதேசம்பாளையம்
2. அழகிரி சுரேஷ் அரசு உயர்நிலைப் பள்ளி, ஆலங்கொம்பு.
3. அரசு ஆண்கள் மேனிலைப் பள்ளி, சேலம்.
4. சாரதா மெட்ரிக் பள்ளி, செஞ்சி.
5. மான்போர்ட் மெட்ரிக் பள்ளி, அரியலூர்.



• ஓவியம்...

உயிரின் மதிப்பு!

பாலுவும் வேலுவும் நண்பர்கள். இருவரும் விடுமுறை நாட்களில் வேட்டையாட காட்டுக்குள் செல்வார்கள். கண்களில் தென்படும் விலங்குகளை விரட்டிச் சென்று வேட்டையாடுவது அவர்களுக்கு மிகவும் பிடிக்கும்.

''இந்த மாதிரி 'த்ரில்' வேற எதிலும் கிடைக்காதுடா'' என்பான் பாலு.

ஒரு நாள் வழக்கம் போல் வேட்டையாடச் சென்றார்கள். மான் ஒன்றை விரட்டியவாறு சென்றார்கள். அப்போது வேலு கால் இடறி ஒரு சரிவில் உருண்டான். அவன் கையிலிருந்த துப்பாக்கியும் எங்கோ விழுந்துவிட்டது.

சரிவில் உருண்ட வேலு 'தொப்'பென கீழே விழுந்தான். கால்களில் சரியான அடி. எழுந்து கொள்ள முடியவில்லை. அப்போது அவனை நோக்கி ஒரு புலி ஆக்ரோஷத்துடன் வந்தது. அவனுக்கு வியர்த்துப் போனது.

'அவ்வளவுதான். நாம் தொலைந்தோம்' என நினைத்து கண்களை மூடிக் கொண்டான். புலி பக்கத்தில் வந்துவிட்டது. அதற்குள் வேலுவைத் தேடி வந்த பாலு வானை நோக்கிச் சுட்டான்.

வெடிச் சத்தம் கேட்டதும் புலி ஓடி விட்டது. பாலு நண்பனை நெருங்கி தூக்கி அமர வைத்தான்.

''நண்பா ஏன் வானை நோக்கிச் சுட்டாய்? புலியையே சுட்டுக் கொன்றிருக்கலாமே'' என்றான் வேலு.

''நான் மட்டும் சற்றுத் தாமதமாக வந்திருந்தால்

பக்கம் ➡ 14



• சித்திரரேகா



சகலகலா வல்லி





சகலகலா வல்லவன்

* மு.யுவராஜ்



* ஓவியம்...

குட்டிக் கதை

நரி ஒன்று விடியற்காலை நேரம் கிராமத்தின் பக்கம் வந்தது. அங்கே ஒரு சேவல் கூரை மீது அமர்ந்து கூவிக் கொண்டிருந்தது.

'ஆகா, கொழுத்த சேவல்! இதை எப்படியாவது சாப்பிட்டுவிட வேண்டும்' என முடிவெடுத்தது நரி.

''சேவலே! நீ இப்போது என்ன பாட்டு பாடினாய்?'' என்று கேட்டது.

''நான் பாடவில்லை எல்லோரையும் எழுப்புவதற்காகக் கூவினேன்'' என்றது சேவல்.

''அடடா, நீ கூவுவதே இவ்வளவு இனிமையாக இருக்கிறதே. பாடினால் எவ்வளவு நன்றாக இருக்கும். எனக்காக ஒரு பாட்டுப் பாடேன்'' என்றது நரி.

இதைக் கேட்டதும் சேவலுக்கு தலை, கால் புரியவில்லை. உச்சி குளிர்ந்து விட்டது. 'நம் குரலை ரசிக்கவும் ஓர் ஆள் இருக்கிறதே' என நினைத்துப் பெருமைக் கொண்டது.

உடனே ஒரு பாட்டு பாடியது. பிறகு ''எப்படி இருக்கிறது?'' என்று கேட்டது.

➡ பக்கம் 14 கீழே

சேவல் பாட்டு!



12ம் பக்க தொடர்ச்சி

என்ன நடந்திருக்கும்? உன்னை உயிருடனே பார்த்திருக்க முடியாது. அதை நினைத்துப் பார்த்தேன். உயிரின் மதிப்பு எத்தகையது என்பது புரிந்தது. அதனால் புலியைக் கொல்ல மனம் வரவில்லை'' என்றான் பாலு.

''உண்மைதான். புலி என்னை நோக்கிப் பாய்ந்து வந்ததும் எனக்கும் உயிரின் மதிப்பு புரிந்தது. இனி நாம் எந்த விலங்கையும் வேட்டையாடக் கூடாது'' என்றான் வேலு.

இருவரும் துப்பாக்கியை வீசிவிட்டு ஊர் நோக்கி நடந்தார்கள்.

துணுக்குகள் :

★ நம்மைப் போலவே தாமரைப் பூவை தேசிய மலராகக் கொண்ட மற்றொரு நாடு எகிப்து.

★ விண்வெளிப் பயணம் பற்றி கதை எழுதி உலகப் புகழ்பெற்ற எழுத்தாளர் - ஜூல் வெர்ன்.

★ பென்சிலை 'கோப்' என்ற பிரெஞ்சுக்காரர் கண்டுபிடித்தார்.



''தாத்தா உனக்குக் குட்டிக் கதையைத்தானே சொன்னாரு. அதுக்கு ஏன் அழறே?''

''தலையில குட்டி, கதையைச் சொன்னாரும்மா!''



வானவில்!

இறைவன் படைத்த காவியமாம்
இயற்கை வரைந்த ஓவியமாம்
கண்ணும் மனமும் கவர்ந்திடுமாம்
கொள்ளை அழகு வானவில்லாம்!

சூரியக் கதிர்கள் கூடி ஒன்றாய்
நீர்த் துளி திவலைகள் சிதறி நன்றாய்
பிறக்குது வண்ண வானவில்லே
ஜொலிக்குது அங்கே உயரத்திலே!

தூரிகை எதுவும் இல்லாமல்
வண்ணப் பொடிகள் சேர்க்காமல்
வானில் தோன்றும் விசித்திரம்
இயற்கை வரையும் சித்திரம்!


- மு.யுவராஜ், பத்தாம் வகுப்பு,
சிவபாக்கியம் முத்துசாமி
மெட்ரிக் பள்ளி,
மாதேசம்பாளையம்

12ம் பக்க தொடர்ச்சி

''எனக்குக் காது கொஞ்சம் மந்தம். நீ பாடியது சரியாகவே கேட்கவில்லை. கிட்டே வந்து பாடினால் நன்றாக இருக்கும்'' என்றது நரி.

முட்டாள் சேவல் நரியின் தந்திரம் புரியாமல் கூரையை விட்டு இறங்கி, அருகே சென்றது.

இப் பகுதியில் நீங்களும் இடம் பெற கதை, கவிதை, துணுக்கு, ஓவியம், புதிர் என உங்களிடமுள்ள படைப்புத் திறமைகளை எழுதி, புகைப்படத்துடன் அனுப்புங்கள். சிறந்தவை பிரசுரமாகும்.



நரி சட்டென சேவலைப் பிடித்துக் கொண்டது. "சேவலே உன் குரலைவிட கறி நன்றாக இருக்கும். ஆகவே உன்னை இரையாக்கிக் கொள்கிறேன்" என்றபடி சாப்பிட்டது.

பாவம், சேவல்! வஞ்சகம் புரியாமல் புகழ்ச்சிக்கு மயங்கி பலியாகிவிட்டது.

துணுக்குகள்

★ விண்வெளிக்கு முதலில் சென்றவர் யூரிகாரின்

★ விண்வெளிக்குச் சென்ற முதல் பெண் வாவண்டினா தெரஸ்கவா

★ நிலாவில் மனிதர்கள் கால் வைத்த நாள் 21.7.1969

★ வியாழனுக்கு 16 துணைக் கோள்கள் உள்ளன.

விடுகதைகள்

1. தாய் தரையில் கிடக்கிறாள், மகளோ மகாராணி கழுத்தில் கிடக்கிறாள். அது என்ன?

(சிப்பி, முத்து)

2. நடுவிலே இருக்கும் பாவைக்கு நான்கு பக்கமும் காவல். அவள் யார்?

(நாக்கு)

- சசித்திரரேகா, ஒன்பதாம் வகுப்பு, ஸ்ரீ சரஸ்வதி பாடசாலா பெண்கள் மேல்நிலைப் பள்ளி, கும்பகோணம்

● கவிதை

ஆசிரியர்!



அன்பின் வடிவாய்த் திகழ்ந்திடுவார்
அன்னையைப் போல் காத்திடுவார்
அறிவுக் கண்ணைத் திறந்திடுவார்
அவர்தான் எங்கள் ஆசிரியர்!

பண்பின் உருவாய் இருந்திடுவார்
பணிவு கொள்ளப் புகன்றிடுவார்
சின்னத் தவறு செய்பவரைச்
சினமே இன்றி பொறுத்திடுவார்!

எண்ணில் அடங்கா சிறுவர்களை
ஏணிப் படியாய் உயர்த்திடுவார்
மண்ணின் சுடர் விளக்குகளாய்
மாணாக்கரை ஒளிரச் செய்வார்!


பிப்ரவரி 2007...
வெள்ளி விழா சிறப்பிதழில்...
தெரிந்து கொள்ள ...... இந்த நாள்; வந்த நாள்!
புரிந்து மகிழ .... அழகே, அமுதே, தமிழே!
படித்து ரசிக்க .... குழந்தைக் கடவுள்கள்!
கோகுலம் 25 வெள்ளி விழா
25
மேலும் பல சுவையான பகுதிகள், போட்டிகள், பரிசுகள்!
இப்போதே கடைக்காரரிடம் சொல்லி வையுங்கள்!
கோகுலம்
குழந்தைகளின் குதூகலம்!

அன்புடன் ஜக்கு...





ஹலோ தோழர்களே! எப்படி இருக்கீங்க? இத்தனை நாளா நீங்க கேள்வி கேட்க, நான் பதில் சொல்லிட்டிருந்தேன். இனிமே நான் கேள்விகளைக் கேட்பேன், நீங்க பதில் சொல்லணும். ஒவ்வொரு மாசமும் ஐந்து கேள்விகளைக் கேட்பேன். அருமையா பதில் சொல்றவங்களுக்குச் சன்மானம் உண்டு.

பதில்களை போஸ்ட் கார்டுல மட்டும்தான் எழுதணும். ஒருத்தரே ஐந்து கேள்விகளுக்கும் பதில் எழுதலாம். ஆனா ஒரு போஸ்ட் கார்டுல ஒரு கேள்வியும் அதற்கான பதிலும் மட்டுமே இருக்கணும். உங்கள் பள்ளி பெயர், வகுப்பு, வீட்டு முகவரி தெளிவாக இருக்க வேண்டும். சரி இனி கேள்விகளைப் படிங்க! கடைசி தேதி:10.01.07.





1. இந்த வருஷம் புத்தாண்டுக்கு என்ன உறுதி மொழியை எடுத்தீர்கள்?

2. நாம் நடந்து கொண்டே நிலாவைப் பார்க்கும்போது அதுவும் நம்மோடு வருவது போலிருக்கே, ஏன்?

3. நமது குடியரசுத் தலைவர் அப்துல் கலாமைச் சந்தித்து ஒரு பரிசு தரும் வாய்ப்பு கிடைத்தால், என்ன பரிசு தருவீர்கள்? காரணம்...

பதில் சொல்லுங்க, பரிசு வெல்லுங்க!

4. தரையில் தூரத்தை கிலோ மீட்டர் என்கிறோம், கடலில் 'நாட்டிகல்' என்கிறோம், வான் வழித் தூரத்தை எப்படி அழைக்கிறோம்?

5. மாதா, பிதா, குரு, தெய்வம்... அடுத்ததாக யாரைச் சொல்லலாம், ஏன்?

இமயம் முதல் குமரிவரை நமது தேசமாம்
இங்குள்ளோர் அனைவருமே நமக்கு நேசமாம்!
கனிவளமும் கலைவளமும் நிறைந்த தேசமாம்
கருணையுள்ள மக்கள் வாழும் பரந்த தேசமாம்!

வான் புகழ் வள்ளுவர் பிறந்த தேசமாம்
வாழும் முறை பலப்பலவும் சொன்ன தேசமாம்!
அமைதிப்புறா நேரு மாமா வாழ்ந்த தேசமாம்
அகிலத்துக்கே அமைதியினைச் சொன்ன தேசமாம்!

நமது மக்கள் நமது செல்வம் என்று வாழுவோம்
நாளும் உழைத்து நாட்டு வளம் தன்னைக் கூட்டுவோம்!
ஒற்றுமையாய் வாழ்வது உலக நன்மையாம்
ஒலிக்கட்டும் எங்குமிந்த உண்மை வார்த்தையாம்!

- எஸ்.மாதேஸ்வரன்,
அகரம்



நமது தேசம்!



நலமாய் வாழ...



கண்ட பொருளை எரிப்பதனால்
காற்று மாசு அடைகிறது!
அண்ட வெளியில் ஓசோனும்
அதிகம் பாதித்துச் சுடுகிறது!

மரங்களை வெட்டி எடுப்பதனால்
மண்ணில் வளம் குறைகிறது!
பிறக்கும் மனிதர் உடலிலும்
பற்பல குறைகள் வருகிறது!

சுற்றுச் சூழலைக் காத்திடுவோம்
சுகமாய் வாழ வழி செய்வோம்!
நாளை பிறக்கும் குழந்தைகளை
நலமுடன் இருக்கச் செய்திடுவோம்!

- ஆர்.திவ்யா, ஏழாம் வகுப்பு,
சாரதா மெட்ரிக் பள்ளி,
செஞ்சி

வெள்ளை முயல்!

துள்ளித் துள்ளிப் பாயுது
வெள்ளை வெள்ளை முயலிது!
பதுங்கிப் பதுங்கிச் செல்லுவேன்
பாய்ந்தே பிடித்து அள்ளுவேன்!

கோலிக் கண்ணு முயலிது
காது நீண்ட முயலிது!
துள்ளி ஓடும் முயலையே
துரத்திச் சென்று வெல்லுவேன்!

வெள்ளை முயலைக் காணவே
விரைந்தே நீங்கள் வாருங்கள்!
அள்ளிக் கொண்டே பாடுவோம்
ஆனந்தமாய் ஆடுவோம்!

- பாவலர் கருமலைப்
பழம் நீ. சென்னை



புத்திசாலி

நரி பாலு யோசனையுடன் அமர்ந்திருப்பதை, அந்த வழியாக வந்த புலி நந்து கவனித்தது.

''என்ன நரி தம்பி என்ன யோசனை?'' என்று கேட்டது.

''கிட்டு முயல் மேல ரொம்ப நாளாவே ஒரு கண். அவனைப் புடிச்சு சாப்பிடணும்னு ஒவ்வொரு முறையும் 'ட்ரை' பண்றேன். பயல் தந்திரமா தப்பிச்சுடறான்'' என்றது பாலு.

''தந்திரக்காரன்னு பேர் வாங்கின உன்கிட்டேயே தந்திரமா? நான் வேணும்னா 'ஹெல்ப்' பண்றேன். அவனைப் பிடிச்சதும் பங்கு போட்டுக்குவோம்'' என்றது நந்து.

பாலு ஒரு திட்டம் சொன்னது. ''நான் கிட்டுவின் வீட்டுக்குப் பின் பக்கம் ஒளிஞ்சுக்கறேன். நீ முன் பக்கம் போய் அதைச் சாப்பிடப் போறதாச் சொல்லு. அது பயந்து பின் பக்கமா ஓடிவரும். அப்ப நான் பிடிச்சுடறேன்'' என்றது.

நந்து சம்மதிக்க, இரண்டும் கிளம்பின. பாலு கிட்டுவின் வீட்டுக்குப் பின்னால் ஒளிந்து கொண்டது. நந்து வாசலை அடைந்து ''அடேய்! கிட்டு வாடா வெளியே'' என்றது.

எட்டிப் பார்த்த கிட்டு ''எ.... என்ன அண்ணே?'' என்று கேட்டது.

''உன்னை நான் சாப்பிடப் போறேன்'' என்றது நந்து.

'நம்மை மாதிரி சின்ன மிருகங்களை கண்டு கொள்ளாமல்





இருந்த புலி ஏன் திடீ ரென இப்படிச் சொல் கிறது' என்று யோசித்தது கிட்டு.

அப்போது பின் பக்கம் நரி பதுங்கி இருப்பதைக் கவனித்தது. என்ன நடந்திருக்கும் என்பதை யூகித்த கிட்டு, தந்திரத்தால் தப்ப முடிவு செய்து 'கலகல' என சிரித்தது.

"ஏய், எதுக்குச் சிரிக் கறே?" என்று கேட்டது நந்து,

"நரி சொல்லித்தானே இங்கே வந்தீங்க? உங்களை நினைச்சா பாவமா இருக்கு. எனக்கு 'ஜக் குன் குனியா'ன்னு ஒரு நோய் வந்திருக்கு" என்றது.

"ஜக்குன் குனியாவா என்ன அது?" என்று விழித்தது நந்து.

"என் முன்னாடி யார் நின்னு பேசினாலும் அவங்களுக்கும் அது பரவிடும். உங்களை ஒழிக்க நரி போட்ட பிளான்ல மாட்டிக்கிட்டீங்க. சந் தேகமா இருந்தா இப்படி கிட்டேவந்து என் கண் களைப் பாருங்க" என்றது கிட்டு.

நந்து பயந்து போனது. 'இப்பத்தான் புதுசு புதுசா வியாதிங்க வருதே! கிட்டு சொல்றது உண் மையாதான் இருக்கும். அடேய் நரிப்பயலே இரு வரேன்' என நினைத்த வாறு கோபமாகத் துரத் தியது.

பாலு புரியாமல் ஓட, கிட்டு விழுந்து விழுந்து சிரித்தது.

கிட்டு!



- கே.பி.அகல்யா,
ஐந்தாம் வகுப்பு,
வேல்ஸ் வித்யாஷ்ரம்
பள்ளி, பல்லாவரம்

எலியைப் பிடிக்க ஐடியா!

நான் தினமும் தோழிகளுடன்தான் பள்ளிக்குச் செல்வேன். அப்போது ஏதாவது பேசியவாறு செல்வோம். அப்படி ஒரு நாள் பேசிக் கொண்டிருக்கையில் என் தோழி ''எங்க வீட்டுல எலித் தொல்லை அதிகமாயிடுச்சு. எல்லாப் பொருட்களையும் கடிச்சு வெச்சுடுது. புக்ஸைக் கூட விடறதில்லை. ராத்திரியில கால் பக்கமும் தலைப் பக்கமும் ஓடுதுங்க'' என்றாள்.

''மருந்து வைக்க வேண்டியது தானே?'' என்றாள் இன்னொரு தோழி.



''அந்த எலிங்க எல்லாம் சரியான கில்லாடிங்க. மருந்து தடவின உணவுப் பொருளை மட்டும் சாப்பிட மாட்டேங்குது. ராத்திரியில வாயைத் திறந்துகிட்டு தூங்கினா, வயித்துக்குள்ளேயே போயிடும் போலிருக்கு'' என்றாள் அவள்.

உடனே அடுத்தவள் ''அப்படி வயித்துக்குள்ளே எலி போய்ட்டா அதை ஒழிக்க என்கிட்டே சூப்பர் ஐடியா இருக்கு'' என்றாள்.

நாங்கள் ஆவலுடன் 'அது என்ன?' என்று கேட்டோம்.

''ஒரு பூனையைப் பிடிச்சு முழுங்கிடு. அது உள்ளே போய் எலியைப் பிடிச்சுடும்'' என்றதும், பேருந்தில் இருந்த அனைவரும் சிரித்து விட்டனர்.

- அ.அனீஸ் பாத்திமா, ஒன்பதாம் வகுப்பு, எஸ்.ஏ.டி. மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, உத்தமபாளையம்.

இடம் நிச்சயம்!

நானும் அம்மாவும் பேருந்தில் சென்று கொண்டிருந்தோம். அன்று முகூர்த்த நாள் என்பதால் கூட்டமாக இருந்தது. இருவரும் நின்று கொண்டுதான் இருந்தோம். ஓரிடத்தில் இரண்டு பேர் இறங்கினார்கள். அங்கே நானும் அம்மாவும் உட்கார முயன்றோம். அப்போது ஓர் ஆன்ட்டி சட்டென உட்கார்ந்து விட்டார். ''உங்களுக்கு முன்னாடி நான் ஏறினேன். அதனால நான்தான் உட்காருவேன். வேணும்னா உங்க பொண்ணு மட்டும் உட்காரட்டும்'' என்றார்.

நான் அவர் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டேன். பேருந்தில் சென்றாலே





எனக்கு வாந்தி வரும். அன்றும் வருவது போல் இருக்கவே அம்மா பக்கம் திரும்பி ''அம்மா 'கேரி கவர்' கொடு. வாந்தி வருது'' என்றேன். இதைக் கேட்டதும் பக்கத்தில் அமர்ந்திருந்த ஆன்ட்டி எழுந்துவிட்டார்.

''ஏம்மா உன் பொண்ணுக்கு வாந்தி வருங்கறதை முன்னாடியே சொல்லக் கூடாதா? நான் வேற பட்டுச் சேலை கட்டி இருக்கேன். இங்கே நீயே உட்காரும்மா'' என்று கூறி இடம் விட்டார்.

''இனிமே உன்னோடு பஸ்ல வந்தா எனக்கும் இடம் நிச்சயம்டி'' என்று அம்மா சிரிப்புடன் கூறினார். எப்போது பேருந்தில் சென்றாலும் இந்தச் சம்பவம் எனக்கு நினைவில் வரும்.

- பா.சு.ஸ்ரீநிதி, ஐந்தாம் வகுப்பு, ஆல்ஃபாப்ளஸ் நர்சரி பள்ளி, திருச்சி

பயம் போக வழி!

ஒரு முறை எதிர்வீட்டு அக்கா வெளியூருக்குச் செல்ல இருந்தார். அவர் வீட்டில் யாரும் இல்லாததால் வழியனுப்ப என் அம்மாவுடன் நானும் என் அத்தைப் பையனும் சென்றோம். நால்வரும் பேருந்து நிலையத்தை அடைந்தோம்.

''நான் எப்பவும் தனியா ஊருக்குப் போனதே இல்லை. இப்ப தான் முதல்முறையாப் போறேன். அதனால கொஞ்சம் பயமா இருக்கு'' என்றார் அக்கா.

உடனே என் அத்தைப் பையன் ''ஆன்ட்டி பயம் தெரியாம இருக்க நான் ஒரு சூப்பர் யோசனை சொல்லட்டுமா?'' என்று கேட்டான்.

''என்ன சொல்லு?'' என்றார் அவர்.

''பஸ் கிளம்பினதும் தூங்கிடுங்க. கண்டக்டர்கிட்ட ஊருக்குப் போனதும் எழுப்பச் சொல்லுங்க. தூங்கிட்டா பயம் தெரியாதில்லே'' என்றான்.

அவனது இந்தச் சாதுர்யமான பதிலைக் கேட்டு வியந்து சிரித்தோம்.

- ஆர்.கார்த்திக், ஆக்ஸ்போர்டு மெட்ரிக்குலேஷன் பள்ளி, மேற்கு மாம்பலம், சென்னை

அடுத்த இனிக்கும் அனுபவத்துக்கு ரெடியா? உங்கள் வீட்டின் அக்கம் பக்கத்தினருடன் ஏற்பட்ட



நட்பு, செய்த உதவி, அதனால் நிகழ்ந்த சுவையான அனுபவத்தை எழுதி அனுப்புங்கள்.

சூப்பர் கையெழுத்து!

கையெழுத்து என்பது மிகவும் முக்கியமான விஷயம். எல்லோரும் படிக்கும் வகையில் அழகாக, திருத்தமாக இருக்க வேண்டும். நீங்கள் எப்படி? அழகாக எழுதுவீர்கள்தானே?



அப்படியானால் ஒரு வெள்ளைத் தாளில் பத்து வரிகளுக்கு மிகாமல் ஏதாவது ஒரு சுவையான செய்தியை எழுதுங்கள். அத்துடன் கீழே உள்ள கூப்பனைப் பூர்த்தி செய்து பாஸ்போர்ட் புகைப்படத்துடன் **'கோகுலம், சூப்பர் கையெழுத்து, 47, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 32'** என்ற முகவரிக்கு அனுப்புங்கள்.



நீங்கள் எழுதிய செய்தியும் உங்கள் கையெழுத்தும் சிறப்பாக அமைந்தால், உங்கள் கையெழுத்திலேயே கோகுலத்தில் அச்சாகும். சன்மானமும் உண்டு. கறுப்பு மையினால் மட்டுமே எழுதுங்கள். நீங்கள் எழுதியது தான் என்பதற்கு ஆதாரமாக உங்கள் பள்ளி ஆசிரியரின் கையொப்பமும் முடிந்தால் பள்ளி முத்திரையும் இருக்க வேண்டும். அழகாக எழுதுங்கள்; பரிசைப் பெறுங்கள்!

முடிவுத் தேதி : 10.1.2007

பெயர் : ....

வகுப்பு : ....

பள்ளி : ....

....

வீட்டு முகவரி : ....

....

இது எனது மாணவன் / மாணவி எழுதியதுதான்.

....

ஆசிரியர் கையொப்பம்

சிறுகதை

டி.ஜானகி

நினைவுப் பரிசு!

நேரு மேனிலைப் பள்ளி பன்னிரண்டாம் வகுப்பில் நுழைந்த வகுப்பாசிரியருக்கு மாணவ, மாணவிகள் எழுந்து காலை வணக்கம் செலுத்தினர்.

''வணக்கம். எல்லோரும் அமருங்கள். இதுதான் கடைசி நாள் வகுப்பு. முழு ஆண்டுத் தேர்வு வரப் போகிறது. அதன்பிறகு நீங்கள் வெவ்வேறு கல்லூரிகளுக்குச் சென்று விடுவீர்கள். ஆறாம் வகுப்பிலிருந்து இங்கு படிக்கிறீர்கள். உங்களுக்கும் இந்தப் பள்ளிக்கும் ஏழு வருட பந்தம் இருக்கிறது. அதை மறக்காமல் நினைவில் வைத்திருங்கள்'' என்றார்.

''கண்டிப்பாக சார்'' என்று மாணவிகள் கோரஸாகக் கூறினர்.

''நாளை பிரிவு உபசார விழாவுக்கு எல்லோரும் வந்து விடுங்கள். சரி! வகுப்பைத் தொடங்குவோம்'' என்றவர் தேர்வு எழுதும் முறையைப் பற்றிப் பேச ஆரம்பித்தார்.

உணவு இடைவேளையில் மாணவிகள் ஒன்றாகக் கூடி மறுநாளைய விழாவைப் பற்றிப் பேசினார்கள். ஒவ்வோர் ஆண்டும் பன்னிரண்டாம் வகுப்பு மாணவிகள், ஆசிரியர்கள் நடத்தும் விழாதான். பாடல், நடனம், பேச்சு என்று கலகலப்பாக இருக்கும். முடிவில் மாணவிகள் பள்ளிக்கு நினைவுப் பரிசு அளிப்பார்கள்.

''சுபதா! அறிவியல் பிரிவு மாணவிகள் பள்ளிக்கு பீரோவை நினைவுப் பரிசாக வழங்கப் போகிறார்களாம்'' என்றாள் நிலா.

''அப்படியா! வழங்கட்டும்'' என்றாள் சுபதா.

''கணிதப் பிரிவினர் காந்தி, நேரு மற்றும் பல தேசத் தலைவர்கள் ஒன்றாக இருப்பதைப் போன்ற பெரிய புகைப் படத்தைத் தரப்போகிறார்களாம்'' என்றாள் கல்யாணி.

''சந்தோஷம்'' என்றாள் சுபதா.



''என்ன சந்தோஷம்? வித்தியாசமாக இருக்கும் என்று நீ சொன்ன யோசனைப்படி நாம் பரிசு வாங்கியுள்ளோமே, அதை நினைக்கையில் பயமாக உள்ளது'' என்றாள் நிலா.

''என்ன பயம்?''

''மற்றவர்கள் கொடுக்கும் பரிசுகள் மத்தியில் நமது பரிசு எடுபடுமா? இப்போதும் நேரமிருக்கிறது. வேறு ஏதாவது பயனுள்ள பொருளை வாங்கி விடுவோமே'' என்றாள் கல்யாணி.

''இப்போது நாம் வாங்கியுள்ளவை பயனற்றவை என்றா நினைக்கிறீர்கள்?''

''அப்படியில்லை...''

''தயக்கமே வேண்டாம். நாம் கொடுக்கும் பரிசு காலம் காலமாக நிலைத்து நின்று பயன் தரும்'' என்றாள் சுபதா.

சுபதாதான் வகுப்புத் தலைவி. நற்பண்பும் புத்திசாலித்தனமும்மிக்க மாணவி. தனது வகுப்பு மாணவிகளிடம் அவள் ஒரு யோசனை சொன்னாள். ஆரம்பத்தில் அனைவரும் உற்சாகமாகச் சம்மதித்தார்கள். இப்போதோ மற்ற வகுப்பு மாணவிகள் தரப்போகும் பரிசுகள் குறித்து அறிந்ததும் தயக்கம் வந்துவிட்டது.

''சரி, இனி என்ன செய்வது நடப்பது நடக்கட்டும்'' என்றாள் நிலா.

மறுநாள், விழா களைகட்டியது. ஆடல், பாடல் எல்லாம் முடிந்ததும் ஒவ்வொரு வகுப்பு மாணவிகளும் தங்களது நினைவுப் பரிசினை வழங்கினார்கள்.

''அடுத்து வணிகவியல் பிரிவு மாணவிகள்'' என்று அறிவித்ததும், சுபதா தலைமையில் மாணவிகள் மேடையை நோக்கிச் சென்றார்கள்.

ஒவ்வொருவர் கையிலும் ஒரு பூந்தொட்டி இருந்தது. விதவிதமான மலர்கள், மா, வேப்பங்கன்று எனப் பல் வேறு செடிகள். மேடையில் வரிசையாக வைத்தார்கள். ஆசிரியர்களும், விழாவுக்குத் தலைமை தாங்க வந்திருந்த வரும் வியந்து போனார்கள்.

தலைமையாசிரியர் பேச எழுந்தார்

''மாணவச் செல்வங்களே, அனைவருக்கும் வணக்கம்! அன்பை வெளிப்படுத்தும் வகைகளில் பரிசு அளிப்பதும் ஒன்று. அந்தப் பரிசு வெறும் அலங்காரப் பொருளாக மட்டுமில்லாமல் பயன்தரும் வகையில் இருக்க வேண்டும். அந்த வகையில் நீங்கள் அளித்திருக்கும் பரிசுகள் எல்லாமே பயனுள்ளவைதான். ஆனாலும் வணிகவியல் வகுப்பு மாணவிகள் அளித்துள்ள பரிசு என்னை மிகவும் மகிழ்ச்சியடைய வைத்துவிட்டது. இந்த யோசனையைச் சொன்னது யார்?'' என்று கேட்டார்.



மாணவிகள் சுபதாவை மேடையில் ஏற்றினார்கள்.

''வெரிகுட்! மரங்கள் நமக்கு எவ்வளவு முக்கியமானவை என்பதைப் பாடங்களிலேயே படித்திருப்பீர்கள். இன்றைக்கு மட்டுமின்றி நாளைய தலைமுறைக்கும் பயனளிக்கும் பரிசை அளித்திருக்கிறீர்கள். இப்போது இங்குள்ள அனைவருமே பள்ளியை விட்டுச் சென்ற பிறகும் இவர்கள் கொடுத்துள்ள பரிசு நிலைத்து நிற்கும். அதற்காக சுபதாவைப் பாராட்டுகிறேன்'' என்றார்.

அனைவரும் கைகளைத் தட்டி வாழ்த்தை தெரிவித்தனர். ●

நீங்கள் மிகவும் விரும்பும் கோகுலம் உங்கள் வீடு தேடி வர சந்தா செலுத்துங்கள்.



பெயர்: ....

முகவரி: ....

....

....

....

ஒரு வருட சந்தா ரூ. 96/-. இதை டிமாண்ட் டிராஃப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். உள்ளூர் காசோலைகள் மட்டுமே ஏற்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி:

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்,) கல்கி பில்டிங்ஸ், 47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 032

தொடர்கதை

என் பெயர் தென்றல்!

தனியாக இருந்த அந்தக் குடிசையை நோக்கி நடக்க ஆரம்பித்தாள் ஆனந்தி. அது ஓர் ஒற்றையடிப் பாதை. பாதையின் இரண்டு பக்கங்களிலும் பச்சைப் பசேலென்று செடிகள். ஒவ்வொரு செடியிலும் கொத்துக் கொத்தாகப் பூக்கள். ஒவ்வொரு பூவைச் சுற்றியும் கொத்துக் கொத்தாகப் பட்டாம் பூச்சிகள்.

ஆனந்தி நடந்து கொண்டிருக்கும் போதே, இலேசாகத் தூறல் போட ஆரம்பித்தது. இரண்டு தென்னை மரங்களுக்கு நடுவே அமைந்திருந்தது அந்த ஓலைக் குடிசை. சாதாரண ஓலைக் குடிசைதான். ஆனால், அந்த இடத்துக்கு குடிசை ரொம்பவும் அழகாக இருந்தது. ஆனந்திக்கு ஒரே பொறாமை. சென்னையில் அத்தனைப் பெரிய அபார்ட்மெண்ட் இருந்து என்ன பிரயோஜனம்? இந்தக் குட்டியூண்டு குடிசை எவ்வளவு அற்புதமாக இருக்கிறது.



குடிசையை நெருங்கினாள். வெளியே ஒரு கயிற்றுக் கட்டில். தலையணை, கைத்தடி இரண்டும் இருந்தன. யாரோ ஒரு தாத்தாவின் வீடாக இருக்கும் என்று ஆனந்தி நினைத்துக் கொண்டாள்.

வீடு திறந்துதான் இருந்தது. கதவு என்று சொல்லிக்கொள்ளும்படியாக எதுவும் இல்லை. மூங்கில் கம்புகளை உடைத்துப் பெயருக்கு ஒரு கதவைப் பொருத்தியிருந்தார்கள்.

ஆனந்தி அந்த மூங்கில் கதவை ஒரு முறை தட்டினாள்.

''ஹலோ!''

ஒரு சத்தமும் இல்லை. கதவைப் பிடித்து உலுக்கினாள்.

''ஹலோ! வீட்டுல யாரு?''

ம்ஹூம்... உள்ளே ஆட்கள் இருப்பதற்கான அறிகுறியே இல்லை. வீட்டைத் திறந்து

வைத்துவிட்டு எல்லாரும் எங்கே போய்விட்டார்கள்?

யோசித்துக்கொண்டே வீட்டுக்குள் நுழைந்தாள் ஆனந்தி. வெளியிலிருந்து பார்த்ததைவிட சிறிய வீடுதான். அது! ஒரே ஓர் அறை. மொத்த வீடே அவ்வளவுதான். ஓர் ஓரத்தில் சமையல் பாத்திரங்கள். மற்றொரு மூலையில் துணிமணிகள்.

ஆனந்தி அடுத்த அடியை எடுத்து வைப்பதற்குள் பின்னாலிருந்து ஒரு குரல்.

"யாரது?"

திடுக்கிட்டுத் திரும்பினாள் ஆனந்தி. ஒரு தாத்தா கையில் கொம்புடன் நின்றிருந்தார். "யாரும்மா நீ?"

"என் பேரு ஆனந்தி. நான் இந்த ஊருக்குப் புதுசு..."

ஆனந்தி பேசுவதைக் கேட்காமல் அவளையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தார் அந்தத் தாத்தா. ஆனந்திக்குப் புரியவில்லை. 'என்னை ஏன் இவர் இப்படி முறைத்து முறைத்துப் பார்க்கிறார்? ஒரு வேளை அடிக்கப் போகிறாரோ!'

ஆனந்தியை வீட்டுக்கு வெளியே அழைத்துச் சென்றார் தாத்தா. தூறல் விட்டிருந்தது. கயிற்றுக் கட்டிலில் அமர்ந்தார். அவளையும் உட்காரச் சொல்லி சைகை செய்தார்.

"உன்னைப் பார்க்கிறதுக்கு ரொம்ப ஆச்சரியமா இருக்கு ஆனந்தி. என்னால நம்பவே முடியலை. ஏதாவது சாப்பிடுறியாம்மா?"



'அப்பாடா!...' இப்போதாவது கேட்டாரே என்று நினைத்துக் கொண்ட ஆனந்தி தலையை அசைத்தாள்.

''ஒரு நிமிஷம் இங்கே இரும்மா.''


சொல்லிவிட்டு அவசர அவசரமாக உள்ளே ஓடினார் அந்தத் தாத்தா. சிறிது நேரத்தில் பாத்திரங்களை உருட்டும் சத்தம் கேட்டது. ஐந்து நிமிடங்கள். ஒரு கையில் தட்டு ஒரு கையில் தம்ளர். வாய் நிறைய புன்னகையுடன் வெளியே

''இங்க யாரைத் தேடி வந்தே ஆனந்தி?''

''என் ஃபிரெண்ட் வீடு பாலக்காட்டுல இருக்கு. ஆனா தூக்கத்துல பாலக்காட்டுல இறங்க மறந்துட்டேன்.''

''தனியாவா வந்தே?''

''ஆமாம் தாத்தா, எங்க ஊரு போரடிக்சுப் போச்சு; அதான் சுத்திப் பார்க்கலாம்னு இங்கே வந்துட்டேன்.''



வந்தார் தாத்தா.

''இந்தா... என் பேத்தி செஞ்ச தோசை. நல்லா இருக்கா, பாரு.''

ஆனந்தி அவசர அவசரமாக அந்தத் தட்டை வாங்கிக் கொண்டு சாப்பிடத் தொடங்கினாள். பயங்கரப் பசி!

இப்பவும் அந்தத் தாத்தா ஆனந்தியையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார். அவரது கண்களில் திகைப்பு, அதிர்ச்சி ப்ளஸ் ஒருவித பயம்! ஆனால் ஏன் என்று மட்டும் ஆனந்திக்குப் புரியவேயில்லை.

ஆனந்தியைப் பார்த்ததும் தென்றல் அப்படியே நின்றுவிட்டாள்!

மூன்று தோசை. ஒரு துண்டு மிச்சம் வைக்காமல் எல்லாவற்றையும் சாப்பிட்டு முடித்தாள் ஆனந்தி. கொத்துமல்லிச் சட்னி தேனைப் போல் சுவைத்தது.

''எங்கக் கூட ஒரு வாரம் இருக்கியா, ஆனந்தி?''

ஆனந்தி யோசித்தாள். பேசாமல் இந்த இடத்தில் தங்கினால் என்ன? அழகான குடிசை. தாத்தாவும் அன்பாக இருக்கிறார்.

''என்னோட பேத்தி வயல்காட்டுக்குப் போயிருக்கா. அவ திரும்பி வரட்டும். அவளைப் பார்த்தா நீ இந்த இடத்தை விட்டுப் போகமாட்டே!''

''ஹா... ஹா... உங்க பேத்தி என்ன ஸ்பெஷல் பொண்ணா?''

தாத்தா புன்னகை செய்தார்.

''இன்னும் கொஞ்ச நேரத்துல அவ இங்கே வந்துடுவா. நீயே பார்த்துட்டுச் சொல்லு.''

ஆனந்தி கயிற்றுக் கட்டிலை விட்டு இறங்கிக் கொண்டாள்.

"தாத்தா, உங்க வீட்டுக்குப் பின்னாடி நிறைய மரம் எல்லாம் இருக்கே; பார்க்கலாமா?"

"ஓ. தாராளமா பார்க்கலாம். வா, நானே கூட்டிக்கிட்டுப் போறேன்."

தாத்தா ஆனந்தியின் கையைப் பிடித்து அழைத்துச் சென்றார். ஆனந்தி நினைத்துப் பார்க்க முடியாத படி தோட்டம் பெரிதாக இருந்தது.

"வாவ்... இது எல்லாமே உங்களோட தோட்டமா?"

"இது பெரிய காடு! ஆனந்தி. காட்டுக்கு நடுவுல நாங்க குடிசைப் போட்டு இருக்கோம். இங்க இருக்கிற மரம், செடி கொடியை நம்பித்தான் எங்க வாழ்க்கையே ஓடுது."

"அவசரத்துக்கு ஏதாவது வாங்கணும்னா எங்கே போவீங்க?"

"இங்க இருந்து 25 கி.மீ. தள்ளி ஒரு சின்ன டவுன் இருக்கு. வாரத்துக்கு ஒரு நாள் அங்கே போய் என்னென்ன வாங்கணுமோ வாங்கிட்டு வந்துடுவோம். மத்தபடி, காய்கறி, அரிசி, கீரை, பழம் எல்லாம் தோட்டத்துல கிடைக்கும்."

இருவரும் பேசிக் கொண்டிருக்கும் போது மூங்கில் கதவை யாரோ திறக்கும் ஓசை கேட்டது.

"இதோ, என் பேத்தி தென்றல் வந்துட்டா" என்றபடி தாத்தா திரும்பினார். ஆனந்தியும் ஆர்வத்துடன் திரும்பிப் பார்த்தாள்.

"தாத்தா!" என்று கத்தியபடியே தோட்டத்துக்குள் ஓடி வந்த தென்றல் ஆனந்தியைப் பார்த்ததும் அப்படியே நின்றுவிட்டாள். ஆனந்திக்கு அதைவிட திகைப்பு! அவளால் கண்களை இமைக்கக்கூட முடியவில்லை.

ஆனந்தியும் தென்றலும் பார்ப்பதற்கு அச்சு அசல் அப்படியே ஒன்றாக இருந்தனர்!

(தொடரும்)

1000/- ரூபாய்



பரிசுப் போட்டி முடிவு

நவம்பர் இதழில் அறிவித்த பரிசுப் போட்டியில் நூற்றுக் கணக்கானோர் கலந்து கொண்டனர். பெரும்பாலும் சரியான விடையே எழுதி இருந்தனர். அவர்களில் ஐந்து பேரைக் குலுக்கல் மூலம் தேர்வு செய்து, தலா ரூ.200/- வீதம் பரிசுத் தொகை பகிர்ந்தளிக்கப்படுகிறது.

சரியான விடைகள் :

1.பேனா 2.சைக்கிள் 3.டூத் பிரஷ் 4.கால்குலேட்டர் 5.ஷார்ப்னர்

பரிசு பெறுவோர் :

1.ஆர்.ஜி.ஹரிஹரன், கலைமகள் மெட்ரிகுலேஷன் பள்ளி, திருச்சி

2.ஷா.ஷப்ரீனா, இஸ்லாமிய மாதிரிப் பள்ளி, திருவிதாங்கோடு

3. பி.ஸ்டெபினா, அமுதம் மெட்ரிக் மேனிலைப்பள்ளி, மதுரை

4.என்.வீரராகவன், எஸ்.எஸ். வீஎம்.மேனிலைப் பள்ளி, பம்மல்

5.த.ஆகாஷ்மாரி, சங்கரா நடுநிலைப் பள்ளி, கடையநல்லூர்

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள். கலந்து கொண்டவர்களுக்கு நன்றி!

போட்டி

பரிசு ரூபாய் 1000/-

1



2



3



என்ன இது; என்ன இது?

4



5



கிராமங்களில் காணப்படும் சில பொருட்கள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றின் படங்கள் முழுமையாக இல்லாமல் ஒரு பகுதி மட்டுமே உள்ளன. படங்களைச் சரியாகக் கவனித்து அவற்றைக் கண்டுபிடித்து எழுதுங்கள். உங்கள் முகவரி, பெற்றோர் கையொப்பத்துடன் கோகுலம் முகவரிக் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். சரியான விடையளித்தவர்களில் ஐந்து பேர் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு, பரிசுத் தொகை பகிர்ந்தளிக்கப்படும். ஆசிரியர் தீர்ப்பே இறுதி.


கடைசி தேதி : 18.1.2007

ஆசிரியர்,
கோகுலம்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032



கோகுலம் தீம் பார்க்
வேடிக்கை
விளையாட்டு
புதிர் உலகம்
உங்களை
அன்புடன் வரவேற்கிறது
உங்கள் சின்னஞ்சிறு கைகள்,
பளபள கண்கள்,
சுட்டியான மூளை
அனைத்துக்கும் சவால்!

வண்ணம் தீட்டுங்கள்!





குட்டீஸ் கோகுலம்

இந்தப்
படத்துக்கு
வண்ணம்
தீட்டி
அழகு
படுத்துங்க,
குட்டீஸ்!

எத்தனை? எத்தனை? எத்தனை?

கீழே எத்தனை வட்டங்கள், எத்தனை சதுரங்கள், எத்தனை முக்கோணங்கள் உள்ளன? விரைவாகவும், சரியாகவும் கண்டுபிடியுங்கள். விடை : 47ஆம் பக்கம்.





புத்தாண்டுக் கொண்டாட்டம்!






உங்களிடம் தாயக்கட்டை இருக்கிறதா? இல்லையென்றால் பரவாயில்லை! ஒரே அளவான ஆறு துண்டுச் சீட்டுகளில் ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து, ஆறு என்று எழுதி மடித்துக் கொள்ளுங்கள். தாயக்கட்டைக்குப் பதில் அவற்றைக் குலுக்கிப் போட்டுச் சீட்டை எடுத்து, வருகிற எண்களைக் கொண்டு கட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளைப் பின்பற்றுங்கள். யார் முதலில் கடைசிக் கட்டத்தை அடைகிறார்களோ அவர்கள் புத்தாண்டுக் கொண்டாட்டத்தில் ஜாலியாக கலந்து கொள்ளலாம்!



எலி கேசவனுக்குக் கேரட் கிடைக்குமா? நீங்க மனசு வைச்சா கிடைக்கும். சரியான வழியைக் காட்டுங்க!



குட்டீஸ் கோகுலம்

கேரட் கிடைக்குமா?

புதுமைப் போட்டி

வாவ்! புதுமைப் போட்டிக்கு ஒவ்வொரு மாதமும் வரவேற்பு அதிகரித்துக் கொண்டிருக்கிறது. இது நான்காவது மாதம். மேலும் இரண்டு மாதங்களே உள்ளன. கடந்த மாதம் வந்த கூப்பன்களில் அறிமுகம் செய்யப்பட்ட நண்பர்களுக்கு இந்த இதழ் இலவசமாக அனுப்பப்படுகிறது. வழக்கம் போல் இந்த மாதமும் இடப் பக்கப் போஸ்டரை நீங்க பத்திரப்படுத்துங்க. வலப் பக்கப் போஸ்டரில் கையொப்பமிட்டு உங்கள் நண்பருக்குக் கொடுங்க. புதுமைப் போட்டி கூப்பனைப் பூர்த்தி செய்து, எங்களுக்கு அனுப்புங்க. கோகுலத்தைப் புதிதாக வாங்கத் தொடங்கி இருப்பவர்கள் இப்போட்டியில் கலந்து கொள்ள முடியாதா என்ற கேள்வி எழுந்துள்ளது. அவர்களும் கலந்து கொள்ளலாம். இப்போட்டியின் இறுதி மாதத்தில் பன்னிரண்டு எழுத்துகளும் கொடுக்கப்படும். அவற்றை ஒழுங்குபடுத்தி வாசகத்தைக் கண்டுபிடித்து, எழுதி அனுப்பலாம். அதற்கு இப்போது முதலே கூப்பன்களை அனுப்பி நண்பர்களை அறிமுகம் செய்யுங்கள். (புதுமைப் போட்டிக் கூப்பன் வேறு பக்கத்தில்)



போஸ்டரைச் சேகரிங்க!

பரிசுகளை வெல்லுங்க!

அன்புடன் கோகூ

புதிய வாசகர்களுக்காக போட்டி குறித்த விவரங்கள் :

* இது ஒரு புதுமையானப் போட்டி பரிசும் புதுமையானது. நடுப்பக்கத்தில் ஒரே மாதிரியான இரண்டு போஸ்டர்கள் உள்ளன. இடது பக்க போஸ்டரில் இரண்டு எழுத்துகள் உள்ளன. அது போல் ஆறு மாதங்களுக்கு பன்னிரண்டு எழுத்துகள் வெளியாகும். அவற்றைப் பத்திரப்படுத்தி ஒழுங்குப்படுத்தினால் ஒரு வாசகம் கிடைக்கும். அதை எழுதி அனுப்பினால் பரிசு கிடைக்கும்.
* வலப் பக்கப் போஸ்டரில் அன்புடன் என்பதற்குக் கீழே உங்கள் கையொப்பமிட்டுப் கோகுலம் படிக்காத நண்பருக்குக் கொடுக்க வேண்டும். பிறகு கூப்பனைப் பூர்த்தி செய்து எங்களுக்கு அனுப்ப வேண்டும்.
* நீங்கள் அறிமுகம் செய்த நண்பருக்கு அடுத்த இதழ் கோகுலம் இலவசமாக அனுப்புவோம். அறிமுகப்படுத்திய உங்களுக்குப் போட்டியின் முடிவில் புதுமையான பரிசுகள் காத்திருக்கின்றன. அதிகமான நண்பர்களை அறிமுகம் செய்பவர் நிஜமான தீம் பார்க்கில் ஜாலியா சுத்தப் போறீங்க.



2007



ஜனவரி					
தி	1	8	15	22	29
செ	2	9	16	23	30
பு	3	10	17	24	31
வி	4	11	18	25	
வெ	5	12	19	26	
ச	6	13	20	27	
ஞா	7	14	21	28	

பிப்ரவரி					
தி		5	12	19	26
செ		6	13	20	27
பு		7	14	21	28
வி	1	8	15	22	
வெ	2	9	16	23	
ச	3	10	17	24	
ஞா	4	11	18	25	

மார்ச்					
தி		5	12	19	26
செ		6	13	20	27
பு		7	14	21	28
வி	1	8	15	22	29
வெ	2	9	16	23	30
ச	3	10	17	24	31
ஞா	4	11	18	25	

ஏப்ரல்					
தி	30	2	9	16	23
செ		3	10	17	24
பு		4	11	18	25
வி		5	12	19	26
வெ		6	13	20	27
ச		7	14	21	28
ஞா	1	8	15	22	29

மே					
தி		7	14	21	28
செ	1	8	15	22	29
பு	2	9	16	23	30
வி	3	10	17	24	31
வெ	4	11	18	25	
ச	5	12	19	26	
ஞா	6	13	20	27	

ஜூன்					
தி		4	11	18	25
செ		5	12	19	26
பு		6	13	20	27
வி		7	14	21	28
வெ	1	8	15	22	29
ச	2	9	16	23	30
ஞா	3	10	17	24	

ஜூலை					
தி	30	2	9	16	23
செ	31	3	10	17	24
பு		4	11	18	25
வி		5	12	19	26
வெ		6	13	20	27
ச		7	14	21	28
ஞா	1	8	15	22	29

ஆகஸ்ட்					
தி		6	13	20	27
செ		7	14	21	28
பு	1	8	15	22	29
வி	2	9	16	23	30
வெ	3	10	17	24	31
ச	4	11	18	25	
ஞா	5	12	19	26	

செப்டம்பர்					
தி		3	10	17	24
செ		4	11	18	25
பு		5	12	19	26
வி		6	13	20	27
வெ		7	14	21	28
ச	1	8	15	22	29
ஞா	2	9	16	23	30

அக்டோபர்					
தி	1	8	15	22	29
செ	2	9	16	23	30
பு	3	10	17	24	31
வி	4	11	18	25	
வெ	5	12	19	26	
ச	6	13	20	27	
ஞா	7	14	21	28	

நவம்பர்					
தி		5	12	19	26
செ		6	13	20	27
பு		7	14	21	28
வி	1	8	15	22	29
வெ	2	9	16	23	30
ச	3	10	17	24	
ஞா	4	11	18	25	

டிசம்பர்					
தி	31	3	10	17	24
செ		4	11	18	25
பு		5	12	19	26
வி		6	13	20	27
வெ		7	14	21	28
ச	1	8	15	22	29
ஞா	2	9	16	23	30

கோகுலம்
போஸ்டர்

ப ன்

2007



ஜனவரி

தி	1	8	15	22	29
செ	2	9	16	23	30
பு	3	10	17	24	31
வி	4	11	18	25	
வெ	5	12	19	26	
ச	6	13	20	27	
ஞா	7	14	21	28	

பிப்ரவரி

தி		5	12	19	26
செ		6	13	20	27
பு		7	14	21	28
வி	1	8	15	22	
வெ	2	9	16	23	
ச	3	10	17	24	
ஞா	4	11	18	25	

மார்ச்

தி		5	12	19	26
செ		6	13	20	27
பு		7	14	21	28
வி	1	8	15	22	29
வெ	2	9	16	23	30
ச	3	10	17	24	31
ஞா	4	11	18	25	

ஏப்ரல்

தி	30	2	9	16	23
செ		3	10	17	24
பு		4	11	18	25
வி		5	12	19	26
வெ		6	13	20	27
ச		7	14	21	28
ஞா	1	8	15	22	29

மே

தி		7	14	21	28
செ	1	8	15	22	29
பு	2	9	16	23	30
வி	3	10	17	24	31
வெ	4	11	18	25	
ச	5	12	19	26	
ஞா	6	13	20	27	

ஜூன்

தி		4	11	18	25
செ		5	12	19	26
பு		6	13	20	27
வி		7	14	21	28
வெ	1	8	15	22	29
ச	2	9	16	23	30
ஞா	3	10	17	24	

ஜூலை

தி	30	2	9	16	23
செ	31	3	10	17	24
பு		4	11	18	25
வி		5	12	19	26
வெ		6	13	20	27
ச		7	14	21	28
ஞா	1	8	15	22	29

ஆகஸ்ட்

தி		6	13	20	27
செ		7	14	21	28
பு	1	8	15	22	29
வி	2	9	16	23	30
வெ	3	10	17	24	31
ச	4	11	18	25	
ஞா	5	12	19	26	

செப்டம்பர்

தி		3	10	17	24
செ		4	11	18	25
பு		5	12	19	26
வி		6	13	20	27
வெ		7	14	21	28
ச	1	8	15	22	29
ஞா	2	9	16	23	30

அக்டோபர்

தி	1	8	15	22	29
செ	2	9	16	23	30
பு	3	10	17	24	31
வி	4	11	18	25	
வெ	5	12	19	26	
ச	6	13	20	27	
ஞா	7	14	21	28	

நவம்பர்

தி		5	12	19	26
செ		6	13	20	27
பு		7	14	21	28
வி	1	8	15	22	29
வெ	2	9	16	23	30
ச	3	10	17	24	
ஞா	4	11	18	25	

டிசம்பர்

தி	31	3	10	17	24
செ		4	11	18	25
பு		5	12	19	26
வி		6	13	20	27
வெ		7	14	21	28
ச	1	8	15	22	29
ஞா	2	9	16	23	30

கோகுலம்
போஸ்டர்

அன்புடன்

I. 1. ஆடை உடுத்திருக்கும். பெண்ணும் அல்ல; தாடியுண்டு, மீசையுண்டு, கிழவனல்ல. - அது என்ன?

2. உருண்டை முக ஒய்யாரி, ஊருக்கெல்லாம் உதவும் நாரி, பிழிந்து எடுத்தாலே பித்தமெல்லாம் தீர்த்திடுவாள் - அவள் யார்?

3. அரைச்சாண் ராணி; அவளுக்குள்ளே ஆயிரம் முத்துகள்-அது என்ன?

- ப.சுந்தசாமி, திருச்செங்கோடு

II. 1. தண்டு மேலே தாழி; தாழிக்குள்ளே தண்ணி; தண்ணிக்குள்ளே கொடி; கொடிக்கு மேலே ஒளி - அது என்ன?

2. பிச்சு பிச்சு எறிந்தாலும் பின்னாலேயே முளைக்கிறான்; எப்படி வெட்டி எரிந்தாலும் எட்டு நாளில் முளைக்கிறான் - அவன் யார்?

- பாத்திமா, கீழக்கரை

III. 1. இதயம்போல் துடிப்பிருக்கும்; இரவு பகல் விழித்திருக்கும் - அது என்ன?

2. ஓயாது இரையும் எந்திரமும் அல்ல; உருண்டோடி வரும் கல்லும் அல்ல - அது என்ன?

3. செக்கச் சிவக்க இருப்போம்; தீயில் வெந்து வருவோம்-நாங்கள் யார்?

- ஆர்.அம்பிகா, மதுரை


IV. 1. மெத்து மெத்து பாதக்காரன்; மெல்லிய ஓசைக்காரன்; கொறிக்கும் சுறுப்பனைப் பிடிப்பதில் கெட்டிக்காரன் - யார் அவன்?

2. காட்டுக்குள்ளே கறுப்பழகி. கானம் இசைப்பதில் கெட்டிக்காரி - யார் அவள்?

3. அறைகள் அறுநூறு; அத்தனையிலும் இனிப்புப் பண்டம் ஒரே அளவு.

- கே.பர்கத்துல்லா, பத்தாம் வகுப்பு, அழகிரி சுரேஷ் அரசு உயர்நிலைப்பள்ளி, கோவை

உருண்டை முக ஒய்யாரி!



விடுகதைகள்

கண்டுபிடி! கண்டுபிடி!

இங்குள்ள கட்டங்களில் சில காய்கள், கனிகளின் பெயர்கள் இடமிருந்து வலம், வலமிருந்து இடம், மேலிருந்து கீழ், கீழிருந்து மேலாக உள்ளன. அவற்றைக் கண்டுபிடியுங்கள். மீதமுள்ள எழுத்துகளை ஒழுங்குபடுத்தினால், பிரபல விஞ்ஞானியின் பெயர் கிடைக்கும். அவரையும் கண்டுபிடியுங்கள். விடை : 47ஆம் பக்கம்.

மா	து	ளை	ய்	கா	க்	டை	ண்	வெ
அ	ஸ்	ன்	பீ	மா	ம்	ப	ழ	ம்
வ	கே	ச	ஐ		ட்	ரூ	ட்	பீ
ரை	ர	ப்		ன்	ஆ	ர	ஞ்	சு
ள்	ட்	போ	ப	லா	ஸ்	ழை	வா	சை
பி	லி	ட்	அ	த்	தி	டீ		ட்
ப்	ல்	டா	மு	ரு	ங்	கை	ன்	ரா
ஆ	நெ		ய்	கா	ற்	க	பா	தி






யார் எங்கே செல்வது?




















இங்கே இடப் பக்கம் நான்கு பேர் இருக்கிறார்கள். நால்வருமே அணிந்திருப்பது காக்கிச் சீருடைதான். வலப் பக்கம் அவர்கள் பணிபுரியும் இடங்கள் உள்ளன. யார் எங்கே செல்வார்கள் என்பதைக் கண்டுபிடியுங்கள்!

விடை : 47ஆம் பக்கம்.


வித்தியாசங்கள் எத்தனை?






இரண்டு படங்களுக்கிடையே எத்தனை
வித்தியாசங்கள் உள்ளனவென்று கண்டுபிடியுங்க!
விடை : 47ஆம் பக்கம்.

இங்குள்ள படத்தைப் பார்த்து நீங்களும் வரையுங்கள். ஓவியர் ஆகுங்கள்!





நீங்களும் வரையலாம்!

விடைகள் பக்கம்



கண்டுபிடி! கண்டுபிடி!

மா	து	ளை	ய்	கா	க்	டை	ண்	வெ
அ	ஸ்	ன்	பீ	மா	ம்	ப	ழ	ம்
வ	கே	ச	ஐ		ட்	ரூ	ட்	பீ
ரை	ர	ப்		ன்	ஆ	ர	ஞ்	சு
ள்	ட்	போ	ப	லா	ஸ்	ழை	வா	சை
பி	லி	ட்	அ	த்	தி	ட		ட்
ப்	ல்	டா	மு	ரு	ங்	கை	ன்	ரா
ஆ	நெ		ய்	கா	ற்	க	பா	தி

பிரபலம் : **ஐன்ஸ்டீன்**

எத்தனை? எத்தனை? எத்தனை?

விடை : வட்டங்கள் : 19, சதுரங்கள் : 18 முக்கோணங்கள் : 21



யார் எங்கே செல்வது?

1-இ, 2-ஈ, 3-அ, 4-ஆ


வித்தியாசங்கள்:

1. தென்னை மரம்
2. சிறுவனின் கால்சட்டை
3. பூ
4. காற்றாடி
5. வீட்டு ஜன்னல்

வெட்டுங்கள்! ஒட்டுங்கள்!





கீழே
சின்னதாக
இருக்கும் காரை
பெரிதாகப்
பார்க்க ஆசையா?
இங்கே ஆறு
துண்டுகளாக
இருப்பதை
வெட்டி ஒரு
தாளில் ஒட்டி
முழுமைப்
படுத்துங்கள்.



குட்டீஸ் கோகுலம்

நன்றி, மீண்டும் சந்திப்போம்!




• தேசியக் கொடியானது இந்தியத் தர நிர்ணயக் கழகம் நிர்ணயித் திருக்கிற தரங்களுக்கு உட்பட்டே இருக்க வேண்டும்.



• பொதுக் கட்டடங்களில் பறக்க விடுவ தானால் பருவ நிலை எப்படி இருந்தாலும் சூரிய உதயம் முதல் அஸ்தமனம் வரை அது பறந்து கொண்டிருக்க வேண்டும்.

தேசியக் கொடி



• கொடியை ஏற்றும்போது விரைவாக ஏற்ற வேண்டும்; இறக்கும்போது மெதுவாக இறக்க வேண்டும்.

• பொது மேடைகளில் மேஜை விரிப்பாகவோ, திரைச்சீலையாகவோ உபயோகிக்கக்கூடாது.

• மற்ற நாட்டுக் கொடிகளுடன் நேர் வரிசையில் நமது தேசியக் கொடியைப் பறக்க விடும்போது நமது கொடி வலப் பக்கக் கோடியில் இருக்க வேண்டும்.

• ஊர்வலம் அல்லது அணி வகுப்பில் கொடியை ஏந்திச் செல்வ தென்றால் வலப் பக்கத்தில் ஏந்திச் செல்ல வேண்டும்.

• சுதந்திர தினம் மற்றும் குடியரசு தினங்களின் போது மட்டுமே தேசியக் கொடி ஏற்றப்பட வேண்டும்.

• அவ்வாறு ஏற்றப்படும் கொடி 'கதர்' துணியால் தயாரிக்கப்பட்டதாக இருக்க வேண்டும்.




• தேசியக் கொடியை அவ மதிப்பதோ, அலட்சியமாக வீசுவதோ நாட்டையே அவமதிப்பது போன்ற குற்றம்.

- ஆர்.சாரதா,
திருவான்மியூர்

அழகிய கள்ளிகள்

ஆழி


கள்ளிகள், 'பூக்கும் தாவரங்கள்' என்னும் பிரிவைச் சேர்ந்தவை. கள்ளிகளில் 14000 க்கு மேற்பட்ட வகைகள் இருக்கின்றன. அவை அளவிலும் வடிவத்திலும் வேறுபடுகின்றன. சில வகை, வீடுகளைவிட உயரமானவை. சில வகை, விரல் நகத்தைவிடச் சிறியவை. சில வகை, சட்டி மாதிரி குட்டையானவை. சில வகை, நீண்ட கொடிபோன்றவை.



குண்டூசி மெத்தைக் கள்ளி



பீப்பாய்க் கள்ளி



அந்திக் கள்ளி




குழல் வாத்தியக் கள்ளி




இரவு மலர்ச்சி

கள்ளியின் பூக்கள் மிகவும் அழகானவை. மஞ்சள், ஆரஞ்சு, ஆழ்ந்த சிவப்பு, இளஞ் சிவப்பு, கருஞ் சிவப்பு, வெள்ளை ஆகிய நிறங்களில் அவை பூக்கின்றன. ஆனால், 'இரவு மலர்ச்சி' என்னும் கள்ளியின் பூக்கள் வெள்ளை நிறத்தில் மிக அழகாக இருக்கும். அந்த வகைக் கள்ளிச் செடிகள் எல்லாமே ஒரே சமயத்தில்— ஒரே இரவில்— பூத்து, மறுநாள் வாடிவிடும்! இந்த நிகழ்ச்சியைக் கண்டுகளிக்க, அந்தப் பகுதியில் ஏராளமானோர் இரவில் அங்கே கூடிவிடுவார்கள்!



கள்ளிகள், பாலை வனத்தில் மட்டுமல்ல, எல்லாவித வறண்ட பகுதிகளிலும் வளரக்கூடியவை. பொதுவாக, கள்ளிகளின் வேர்கள் ஆழத்தில் போகாமல், பூமியின் மேல் பகுதிகளில் படர்கின்றன. அதனால், அதிகமான பரப்பிலிருந்து கிடைக்கும் மழைநீரை உறிஞ்சி சேமித்து வைத்துக் கொள்கின்றன.




கள்ளிக்கு இலைகள் இல்லாததால் நீரை ஆவியாக வெளியேற்றுவது இல்லை. மேலும், அதன் தண்டுகளில் மெழுகு போன்ற பூச்சு இருப்பதாலும் அது சேகரித்த நீர் ஆவியாக வெளியேறுவது இல்லை. அதனால் கள்ளி வறட்சியைத் தாங்கிக் கொள்கிறது.



‘மெக்ஸிகோவில் வளரும் ‘சக்வாரோ’ என்னும் ராட்சசக் கள்ளி, மரம் மாதிரி 15 மீட்டர் உயரம் வளரும். ஆனால், இதன் வளர்ச்சி வேகம் மிகக் குறைவு. ஓர் ஆண்டுக்கான வளர்ச்சி 2 மில்லிமீட்டர் உயரம் தான்! இதற்கு ஆயுள் அதிகம். சுமார் 200 ஆண்டுகள் வயதுள்ள கள்ளிகளும் அங்கே இருக்கின்றன!

கள்ளியில் நிறைய முட்கள் இருப்பதால் எந்தப் பறவையும் அதில் உட்காருவதில்லை. ஆனால், அரிசோனாவில் உள்ள ‘பாலைவன ரென்’ பறவை மட்டுமே ராட்சசக் கள்ளியின் உச்சியில் கூடு கட்டுகிறது. பறவைகளின் எதிரிகளான பாம்புகளும் கழுகுகளும் கூட அந்தக் கூட்டை நெருங்க முடியாது!







பூச்செடிகளை வளர்ப்பது போல கள்ளிச் செடிகளையும் அழகுக்காகச் சிலர் வளர்க்கிறார்கள். ருமேனியாவில், ‘பெட்ரே டோப்ரோட்’ என்னும் பள்ளி ஆசிரியர், தன் தோட்டத்தில் 14000 வகையான கள்ளிச் செடிகளை வளர்த்து, உலக சாதனை புரிந்திருக்கிறார்!

கள்ளிச் செடி அமெரிக்கத் தாவரம். அங்கிருந்து தான் அது உலகம் முழுவதிலும் பரவியது. ‘கள்ளிச் செடிகளுக்கு முட்கள் இருப்பதால் தான் கால் நடைகள் அவற்றைத் தின்பதில்லை’ என்று கருதினார் அமெரிக்கத் தாவர இயல் விஞ்ஞானி ‘லூதர் பர்பாங்க்’. அவர் 16 ஆண்டுகள் ஆராய்ச்சி செய்து, முட்களே இல்லாத கள்ளிச் செடிகளை உற்பத்தி செய்து கால் நடைகளுக்கு உணவாக்கினார்!

சென்ற இதழில்...


நாடோடி கும்பலைச் சேர்ந்த தமிழரசனும் முத்தழகியும் தங்கள் கூட்டத்துடன் வைரபுரிக்கு வருகிறார்கள். அங்கே எலித் தலையும் மனித உடலும் கொண்ட விசித்திர உருவங்களைச் சந்திக்கிறார்கள். அவர்களில் ஒருவர் அரசர் என்பதும் அரண்மனையில் அரசர் உருவில் இருப்பது மந்திரவாதி என்பதும் தெரிகிறது. தலைமை மந்திரி கருணாகரனுடன் சேர்ந்து மந்திரவாதியை ஒழிக்க திட்டம் தீட்டுகிறார்கள். இனி...

எலித் தலை

வைரபுரி அரண்மனையை நோக்கி மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து கொண்டிருந்தார்கள். எல்லோரிடமும் உற்சாகம்! இருக்காதா பின்னே? மிகச் சிறந்த கலைக் குழு நடத்தும் கலை நிகழ்ச்சிகளைப் பார்க்கப் போகிறார்களே! ஏற்கெனவே அந்தக் கலைக்குழுவின் பெருமைகளை அறிந்திருக்கிறார்கள்.

''முன்னதாகச் சென்று முதல் வரிசையில் இடம் பிடிக்க வேண்டும்'' என்ற ஆர்வம் ஒவ்வொருவரிடமும் இருந்தது. மாட்டு வண்டிகளிலும், குதிரை வண்டிகளிலும் சென்றும் நடந்து சென்றும் அரண்மனை வாயிலின் மைதானத்தை அடைந்தார்கள்.

மைதானத்தின் மையத்தில் பெரியதாக மேடை அமைக்கப்பட்டிருந்தது. அதனைச்




சுற்றி தடுப்புச் சுவரைப் போல் கயிறு கட்டப்பட்டிருந்தது. மக்கள் அந்தக் கயிற்றைத் தாண்டி வராமலிருக்க காவலர்கள் ஆங்காங்கே நின்றிருந்தார்கள். அந்த மேடையின் ஒரு பகுதியில் தனியாக ஒரு நாற்காலி போடப்பட்டிருந்தது. அதன் வேலைப்பாடு மிகச் சிறப்பாக இருந்தது. பார்த்ததுமே அது அரசருக்கான நாற்காலி என்பது புரிந்தது.

மக்கள் கூட்டம் மைதானத்தை நிறைத்தது. கலைக்குழுவினரும் தயாராகி இருந்தனர். அடிக்கடி மேடைக்கு வந்து திரண்டிருந்த கூட்டத்துக்குக் கையசைத்தார்கள். அரசர் வந்ததும் நிகழ்ச்சி ஆரம்பித்து விடும்.

மனிதர்கள்!

“இந்த அரசர் என்ன செய்து கொண்டிருக்கிறார்? முன்பெல்லாம் எந்த நிகழ்ச்சியாக இருந்தாலும் சரியான சமயத்தில் வந்து விடுவார்; இப்போதோ எல்லாவற்றிலும் தாமதம். அரச சபைக்கே



சரியாக வருவதில்லையாம்! அவர் முன்பு போல் இல்லை; நிறைய மாறி விட்டார்'' என்று ஒருவன் புலம்பினான்.

''அடேய் வாயை மூடு. நீ பேசியது எந்த வீரன் காதிலாவது விழுந்தால் அவ்வளவுதான். அரசரையே குறை சொல்கிறாயா என்று தூக்கிப் போய்ச் சிறையில் தள்ளி விடு



வான்'' என்று அடக்கினான் - பக்கத்தில் இருந்தவன்.

அப்போது வீரர்கள் புடை சூழ அரசர் உருவில் இருந்த மந்திரவாதி மாயவன் ரதத்தில் வந்து இறங்கினான். கூடவே தளபதியும், தலைமை மந்திரி கருணா கரனும் இருந்தார்கள். மக்கள் எழுந்து நின்று வரவேற்றார்கள். கலைக்குழு வினரும் மேடையில் ஒன்றாக நின்று வணங்கினார்கள். அதில் தமிழரசனும், முத்தழகியும் இருந்தார்கள்.

நிகழ்ச்சி ஆரம்பமானது. முதலில் கடவுள் வாழ்த்துடன் நடனம். பிறகு ஒரு நாடகம். அடுத்து முத்தழகியின் தந்தை மேடைக்கு வந்தார்.

''அரசருக்கு வணக்கம்; மக்களுக்கு வணக்கம். இப்போது நீங்கள் சில தந்திரக் காட்சிகளைப் பார்க்கப் போகிறீர்கள். இது மந்திரமில்லை. உங்கள் கண்களை ஏமாற்றும் தந்திரம். கூட்டத்திலிருந்து ஒருவர் எழுந்து வாருங்கள்'' என்றார்.

ஒருவன் எழுந்து மேடைக்கு வந்தான். தமிழரசனும் முத்தழகியும் மேடையில் ஒரு பக்கமாக நின்றிருந்தார்கள். அவர்கள் ரகசியமாக கருணாகரனைப் பார்த்தார்கள். அந்தப் பார்வையின் பொருளைப் புரிந்து கொண்ட அவர், மாயவனிடம் குனிந்தார்.

''அரசே! நான் வந்து நீண்ட நேரமாகிவிட்டது. காவலுக்குச் செல்கிறேன்'' என்றார்.

''சரி! போய் வா'' என்றான் மாயவன். கருணாகரன் கிளம்பினார்.

கூட்டத்திலிருந்து மேடைக்கு வந்தவனிடம் முத்தழகியின் தந்தை சில தந்திரக் காட்சிகளைச் செய்தார். கூட்டம் கைகளைத் தட்டி மகிழ்ந்தது.

''தம்பி உன் விரலில் அணிந்திருக்கும் மோதிரம் தங்க மோதிரமா?''

''ஆமாங்க.''

''எங்கே கொடு பார்க்கலாம்! இது உண்மையிலேயே தங்கமாக இருந்தால் இந்தப் பெட்டியில் போட்டதும் மறைந்து விடும். போலியாக இருந்தால் கறுத்து விடும். சோதித்துப் பார்ப்போமா?'' என்று கேட்டார்.

அவன் பதில் பேச முடியாமல் திணறினான். கூட்டம் சிரித்தது.

''சோதித்துப் பார்த்து விடுவோம். நன்றாகப் பாருங்கள்; இந்தப் பெட்டியில் எதுவுமில்லை. மோதிரத்தைப் போடுகிறேன்'' என்றவர் பெட்டியில் மோதிரத்தைப் போட்டு மூடினார். சில நிமிடங்கள் கழித்து திறந்தார்.

மோதிரம் இல்லை. ''தம்பி, அது உண்மையான தங்கம்தான். அதனால்தான் காணாமல் போய்விட்டது. சரி, வித்தை முடிந்தது. நன்றி, போய் வா'' என்றார்.

அவன் விழித்தான். கூட்டம் 'கலகல'வெனச் சிரித்தது.

''ஐயா, மோதிரம் இல்லாமல் போனால் என் மனைவி உதைப்பாள்''

என்றான் அவன்.

''அப்படியா? உன் மனைவி இங்கே வந்திருக்கிறாளா? அவளைக் கூப்பிடு'' என்றார்.

பெண்கள் பக்கமிருந்து ஒருத்தி மேடைக்கு வந்தாள்.

''மகளே! உன் கணவனுடைய மோதிரத்தைக் கொடுத்து விடு'' என்றார்.

''என்னிடம் இல்லை'' என்றாள் அவள்.

''உன்னிடம்தான் இருக்கிறது. நான் எடுத்துக் காட்டட்டுமா?'' என்று கேட்டவர் அவள் தலையில் சூடியிருந்த பூச்சரத்தை எடுத்தார். அதற்குள்ளிருந்து மோதிரத்தை எடுத்துக் காட்டியதும் கூட்டம் ஆரவாரம் செய்தது.

''கூட்டத்திலிருந்து இவர்களை அழைத்ததால் எங்கள் ஆட்களாகவே இருப்பார்களோ என்று நீங்கள் சந்தேகப்படலாம். அதனால் அதோ அரசர் கையில் இருக்கும் அழகான கோலை மறைய வைத்துக் காட்டுகிறோம்'' என்றார் முத்தழகியின் தந்தை.

உடனே முத்தழகி மாயவனை நெருங்கி, வணங்கி விட்டுக் கையை நீட்டினாள். மாயவனுக்குச் சங்கடமாகி விட்டது. அது சாதாரண கோலா? மந்திர சக்தியுள்ள கோலாயிற்றே! இத்தனைப் பேருக்கு மத்தியில் கொடுக்காமலும் இருக்க முடியாது. அதனால் கொடுத்தான்.

முத்தழகி அதனைத் தந்தையிடம் அளித்தாள். அவர் அதைப் பெட்டியில் போட்டு மூடினார். பிறகு திறந்து காட்டினார். கோலைக் காணவில்லை. தமிழரசன் அருகே வந்து பெட்டியைப் பெற்று கொண்டு நகர்ந்தான்.

''அரசரின் கோல் எங்கே போய் இருக்கும்? அவரது விசுவாசியான தளபதியாரை அழைத்துக் கேட்போம். ஐயா இங்கே வாருங்கள்'' என்று அழைத்தார்.

தளபதி அருகே வந்தார்.

''அரசரின் பொருளைத் திருடியவனை என்ன செய்வீர்கள்?''

''கழுத்தைச் சீவி விடுவேன்.''

''அப்படியா? எங்கே உங்கள் இடுப்பைத் தொட்டுப் பாருங்கள்.''

தளபதி தொட்டார். அங்கே உடைவாள் அருகே அந்தக் கோல் இருந்தது. தளபதி திகைத்துப் போனார்.

''ஐயா, இப்போது என்ன செய்யப் போகிறீர்?' என்று கேட்டதும் கூட்டம் சிரித்தது.

தளபதி மந்திரக்கோலை மாயவனிடம் கொடுத்துவிட்டு பக்கத்தில் நின்று கொண்டார். அடுத்த நிகழ்ச்சி ஆரம்பித்துவிட்டது. அது நடன நிகழ்ச்சி. எல்லோரும் லயிப்புடன் பார்க்கத் தொடங்கினார்கள்.

மாயவனும் சில நிமிடங்கள் லயித்துப் பார்த்தான். திடீரென அவனுக்குச் சந்தேகம் உண்டானது. தன் கையிலிருந்த கோலை அப்படியும் இப்படியுமாகத் திருப்பிப் பார்த்தான். கண்களை மூடி என்னவோ முணு முணுத்தான். சட்டெனத் திறந்தான். இப்போது அந்தக் கண்களில் கோபம்.

''தாமோதரா! இது என்னுடைய மந்திரக் கோலில்லை. அதைப் போலவே இருக்கும் சாதாரண கோல். மேடையில் அந்தச் சிறுமி, பொடியன், கிழவன் யாருமே இல்லை. ஏதோ சதி நடந்திருக்கிறது'' என்று தளபதியிடம் ரகசியமாகச் சொன்னான்.

''பொறுங்கள். நான் மேடையின்



பின்னால் சென்று பார்க்கிறேன்'' என்ற தளபதி தாமோதரன், மேடையின் பின்னால் இருந்த திரையை நெருங்கி விலக்கினான். அடுத்த நொடி அதிர்ந்து போனான். அங்கே அரசர் நின்றிருந் தார். பின்னால் எலிகளாக மாற்றப் பட்ட வீரர்கள், சுய உருவம் பெற்றிருந் தார்கள்.

திடீரென மேடையில் இரண்டு அரசர்களைப் பார்த்ததும் மக்களுக்குத் திகைப்பு! தளபதியை சில வீரர்கள் சூழ்ந்தார்கள். அரசர் மாயவனை நெருங்கினார்.

''என்னடா திகைக்கிறாய்? உனது மந்திரத்தை எங்களது மதிநுட்பத்தால் வென்றுவிட்டோம், பார்த்தாயா?'' என்ற அரசர் வாளை உருவினார். மாயவனும் சண்டைக்குத் தயாரானான்.

நடனம் நடந்து கொண்டிருந்த மேடை நொடிப் பொழுதில் போர்க் களமானது. அரசரின் வீரத்துக்கு முன்பு மாயவனால் தாக்குப் பிடிக்க முடிய வில்லை. வெட்டுண்டு வீழ்ந்தான். என்ன நடக்கிறதெனப் புரியாமல் மக்கள் திகைத்தனர்.

கருணாகரன் மேடைக்கு வந்தார் ''வைரபுரி மக்களே! இங்கே வெட்டுப் பட்டு வீழ்ந்திருக்கும் மந்திரவாதி மாயவன் நமது அரசரை எலியாக மாற்றிவிட்டான். அவர் மீண்டும் பழைய உருவம் பெற இந்தக் கலைக் குழுவினர்தான் உதவினர். குறிப்பாக, தமிழரசனும் முத்தழகியும் அருமை யாகத் திட்டம் போட்டுச் செயல்படுத் தினர். அவர்களை அனைவர் சார்பாக வும் பாராட்டுவோம்'' என்றவர், நடந்த தைக் கூறினார்.

மக்கள் கைகளைத் தட்டித் தங்கள் பாராட்டைத் தெரிவித்தனர்.

(முடிந்தது)





ஜி.எஸ்.எஸ்.

பெர்னார்ட் ஷாவின் தோழி!

* இயற்பெயர் அன்னி உட். லண்டனில் பிறந்தவர்.

* மிகவும் இளம் வயதிலேயே இவரது அப்பா இறந்துவிட்டார். எனவே சில சிறுவர்களுக்குச் சமைத்துப் போட்டு அதில் கிடைத்த வருமானத்தில்தான் அன்னி பெசண்ட்டைப் படிக்க வைத்தார் அவரது அம்மா.

* கணவரின் பெயர் ஃப்ராங் பெசண்ட். டிக்பை, மேபெல் என்று இரண்டு குழந்தைகள்.



* அற்புதமான பேச்சாளர் அன்னி பெசண்ட். அன்னி பெசண்ட்டுக்கும் அவரது கணவருக்கும் அடிக்கடித் தகராறு ஏற்படும். போராட்டங்களின் போது அன்னி பெசண்ட் ஏழை விவசாயிகளுக்கு ஆதரவாகப் பேச, அவரது கணவரோ பணக்கார ஜமீன்தார்களுக்கு ஆதரவு அளித்தார்.

* பின்னாளில் பிரபல நாடக ஆசிரியராக விளங்கிய பெர்னார்ட் ஷா, ஒரு காலத்தில் அன்னி பெசண்ட்டின் நெருங்கிய நண்பர்.

* அயர்லாந்தில் தீக்குச்சி தயாரிக்கும் தொழிற்சாலைகளில் பெண்களுக்கு மிகக் குறைவான சம்பளம்தான் வழங்கப்பட்டது. அவர்களை வேலை நிறுத்தத்தில் ஈடுபடச்செய்து, போராட்டத்துக்குத் தலைமை தாங்கி அதிக ஊதியம் வாங்கித் தந்தார்.

* தனது கத்தோலிக்க மதத்தின் பல நம்பிக்கைகளை அன்னி பெசண்ட் அப்படியே ஏற்கவில்லை. இவரது கேள்விகள் மதகுருமார்களுக்குப் பிடிக்கவில்லை. அதுவும், சிறிய குடும்பங்கள்தான் வளமானவை என்று மறைமுகமான குடும்ப நலப் பிரசாரத்தில் அன்னி பெசண்ட் ஈடுபட்டதை அவர்களால் ஏற்றுக் கொள்ளவே முடியவில்லை. இதற்காக அன்னி பெசண்ட் கைது செய்யப்பட்டார்.

* வாரணாசியில் உள்ள ''மத்திய இந்து கல்லூரி''-ஐ நிறுவியது இவர்தான்.

* சென்னை அடையாறு பகுதியில் உள்ள 'பிரம்ம ஞான சங்கம்' என்ற அமைப்பில் பெரிதும் பங்கு கொண்டார். சென்னையில்தான் இவர் உயிர் பிரிந்தது.

* சென்னையில் உள்ள 'பெசண்ட் நகர்' என்ற பகுதிக்கு இவர் நினைவாகத் தான் அந்தப் பெயர் வைக்கப்பட்டது.



மழையில்

கொட்டும் மழையில் பாவமொரு
குட்டி நாயும் நனைகிறது!
வெட்டி இழுக்கும் குளிராலே
வெட வெடவென்று துடிக்கிறது!

அங்கும் இங்கும் பார்க்கிறது!
அழுது புலம்பித் தவிக்கிறது!
அம்மா நாயைக் காணாமல்
அரற்றிக் கண்ணீர் வடிக்கிறது!

உனக்கும் எனக்கும் உள்ளதுபோல்
உல்லன் ஆடை அதற்கில்லை!
நடுங்கும் குளிரைத் தாங்கிடவே
நல்ல போர்வைத் துணியில்லை!

பாலும் பருக வில்லையது!
பாவம் பசியால் காய்கிறது!
காலும் கையும் படபடக்கக்
கருணை தேடித் தவிக்கிறது!

அதனைக் கண்டான் ஒரு சிறுவன்
அன்பு கொண்டான் அதன்மீது!
அருகில் அழைத்தே அம்மாவை
அந்தக் காட்சியைக் காட்டிட்டான்!



வந்த நாய்க் குட்டி!

என்ன செய்யச் சொல்கின்றாய்?
என்றே மகனை அவள் கேட்டாள்!
அதற்கு அந்தச் சிறுபாலன்
அம்மா விடத்துச் சொன்னானே:

"அன்னையே எனக்கு அன்போடு
அருந்த நீயும் தருகின்ற
பாலில் கொஞ்சம் ஊற்றட்டுமா?
பசியைப் போக்கிப் பார்க்கட்டுமா?"

பேசிய மகனைத் தாயுமே
இழுத்து அணைத்தாள் நெஞ்சோடு!
அதுதான் வாழும் முறைமையடா...!
அதனை உடனே செய்! என்றாள்!

வாடும் உயிர்கள் துயரத்தை
வலிந்து நீக்கல் நம் கடமை!
வாயே இல்லா உயிர்மீதும்
வாஞ்சை காட்டல் நம்கடமை!



இது போன்ற
கதைப்பாடலை நீங்களும்
எழுதி அனுப்பலாம்.

புற்றுநோயே



● ஏழுமலை, சென்னை

? நான் எட்டாம் வகுப்பில் படிக்கிறேன். எனக்கு 'முதல் வகைச் சர்க்கரை நோய்' உள்ளது. தினமும் இன்சுலின் ஊசி போட்டுக் கொள் கிறேன். இன்சுலின் ஊசியி லிருந்து விடுபட வழியுள்ளதா?

! உள்ளது. இப்போது ஊசி இல்லாத இன் சுலின் வந்துள்ளது. இதை வாய்வழியாக உறிஞ்சிக் கொள்ளலாம். ஒரு குழாயைப் போல நீளமாக இருக்கும் இக்கருவி யின் அடிப்பாகத்தில் இன்சுலின் மாத்தி ரையை வைத்து மூடி, மாத்திரையை உடைத்துவிட்டால் இன்சுலின் வாயுவாக மாறி, கருவியில் நிறைந்து விடும். பின்பு மூக்கை மூடிக் கொண்டு, இதை வாயில் வைத்து உறிஞ்சினால் இன்சுலின் மருந்து நுரையீரலுக்குள் சென்று ரத்தத்தில் கலந்துவிடும். இதைப் பயன்படுத்துவது வெகு சுலபம். சாப்பிடும் முன்பு உறிஞ்ச வேண்டும்.

● ஈ.சுரேஷ், எஸ்.கரட்டுப்பட்டி

? காலையில் எழுந்ததும் தேநீர் பருகுவது உடலுக்கு நல்லதா? கெடுதலா?

! தேநீர் ஓர் இரட்டைமுனைக் கத்தியைப் போன்றது. இதை அளவோடு பருகினால் நமக்கு நன்மை கிடைக்கும். காரணம். தேநீரில் 'ஃபிளவி நாய்ட்ஸ்' எனும் சத்துப் பொருள் உள்ளது. இது இதயத்துக்கு நல்லது. தேநீரின் அளவு அதிகமானால் கெடுதலும் செய்யும். இதற்குக் காரணம், இதில் உள்ள 'டானின்' எனும் வேதிப் பொருள். இது நரம்புகளைப் பாதிக்கும்.



● தி.சே.அறிவழகன், திருப்புலி வனம்

? புற்றுநோய் என்றால் என்ன? எதனால் வருகிறது?

! மனித உடலில் ஒவ்வொரு நொடி யும் பழைய செல்கள் அழிந்து புதிய செல்கள் உருவாகிக் கொண்டிருக்கின் றன. நம் உடலில் இயற்கையிலேயே ஒரு கட்டுப்பாட்டுடன் நடைபெற்று வருகின்ற நிகழ்வு இது. சிலருக்கு சில செல்கள் கட்டுப்பாடு இல்லாமல்

ஓடிப் போ!

வளர்ச்சி அடைந்து, கட்டியாக மாறிவிடும். இதைத்தான் 'புற்றுநோய்' என்கிறோம். ஓரிடத்தில் உருவான புற்றுநோய் செல்கள் ரத்தத்தின் வழியாக உடலின் வேறு இடங்களுக்குச் சென்று அங்கும் புற்றுநோயைத் தோற்றுவிக்கும். புகைப்பழக்கம், புகையிலை போடுதல், மூக்குப்பொடி போடுதல், மதுப்பழக்கம் உணவில் கொழுப்பு அதிகமாதல், நார்ச்சத்து குறைதல், மாசடைந்த சுற்றுச்சூழல், வேதிப் பொருள்கள் (எ-டு. நிலக்கரித் தூசியில் உள்ள டைபென்சான்தரசின்) போன்றவற்றால் புற்றுநோய் வருகிறது.

● **விக்ரமாதித்தன், ஜோடர்பாளையம்**

? ஜலதோஷத்துக்கு மருந்தில்லை என்று சொல்லப்படுவது உண்மையா, டாக்டர்? ஏன்?

! உண்மைதான், காரணம், ஜலதோஷம் மற்ற தொற்று நோய்களைப் போல் ஒரே வகைக் கிருமியால் உண்டாவதில்லை. பல்வேறு வைரஸ் கிருமிகள் ஜலதோஷத்தை உண்டாக்குகின்றன. ஆகவே, இத்தனையையும் கட்டுப்படுத்தக்கூடிய மருந்தைக் கண்டுபிடிப்பதில் சிரமம் உள்ளது.

● **ஆர்.கணபதி, கடலூர்**

? எனக்கு நாக்கு அடிக்கடி கடிபட்டு புண்ணாகி விடுகிறது. இதற்கு என்ன செய்யலாம், டாக்டர்?

! கூர்மையான பல் இருந்தால் நாக்கு அடிக்கடி கடிபடுவதற்கு வாய்ப்பு உண்டு. பல் மருத்துவரிடம் சென்று பரிசோதித்துக் கொள். அதிக கூர்மையான பல்லை ராவி சரிசெய்து விடுவார் மருத்துவர். பிறகு புண்ணாகாது.

லேட்டஸ்ட் தகவல்

பள்ளிக்குச் செல்லும் வயதில் உள்ள பெண் குழந்தைகளுக்குத் தலையில்



பேன் உண்டாவது வழக்கம். தற்போது பேன்களை ஒழிக்க ஷாம்பூக்கள் உள்ளன. இவற்றைத் தலையில் அரைமணி நேரம் ஊறவைத்துத் தலைக்குக் குளித்தால்தான் பேன்களை ஒழிக்க முடியும். அதன் ஈறுகளை ஒழிக்க இரண்டு வாரங்கள் கழித்து மீண்டும் ஷாம்பூ பயன்படுத்த வேண்டும். இதைப் பெரும்பாலோர் செய்வதில்லை. அதனால்தான் பேன்கள் நிரந்தரமாகத் தங்கிவிடுகின்றன. அமெரிக்காவில் இப்போது பேன்களை ஒழிக்கும் கருவி ஒன்றைக் கண்டுபிடித்துள்ளார்கள். 'டிரையர்' போல் செயல்படும் இக்கருவியிலிருந்து வெளிவரும் வெப்ப அலைகள் தலையில் உள்ள பேன்களை மட்டுமின்றி ஈறுகளையும் ஒரே நேரத்தில் அழித்துவிடுகின்றன. இதனால் பெண்களுக்குப் பேனிலிருந்து நிரந்தர விடுதலை கிடைத்து விடுகிறது. ●

மேல் உலகில் மாளிகை!



சொர்ணபுரியின் அரசவை ஜோதிடர் பலராமனுக்கு, கட்டடக் கலைஞன் சிவராமனைப் பிடிக்காது.
அவனை ஒழித்து விடணும்
ஒருநாள்...
அரசே, உங்கள் பதவிக்கு ஆபத்து!
எ.... என்ன?
முன்னோர்களின் சாபம் நீங்கினால் தப்பிக்கலாம்.
எப்படி?
மேல் உலகில் அவர்கள் தங்குவதற்கு ஒரு மாளிகை கட்ட வேண்டும்.


அது எப்படி முடியும்?
சிவராமன் இருக்கிறானே! மகா திறமைசாலி.
அரசர் சிவராமனை வரவைத்தார்.
சிவராமா, எனது முன்னோர்கள் வசிக்க மேலுலகில் ஒரு மாளிகை கட்ட வேண்டும்.
மேலுல கிலா?
ஆம்; நாளையே புறப்படு.
சிவராமன் செய்வதறியாது குழம்பினான். மந்திரி மகிபாலன்...
அவனுக்கு உதவுவோம்.
சிவராமா, கவ லைப்படாதே. நான் சொல்வதைச் செய்.
சரி!


மறுநாள்
அரசே, மேலுலகம் செல்ல நான் தயார். ஆனால்...
சொல்!
அங்கே மாளிகை கட்ட சிறந்த இடம் எதுவென பலராமனை அனுப்பித் தேர்ந்தெடுக்கச் சொல்லுங்கள்!
அதுவும் சரிதான்.
ஐயோ! அரசே, நான் சொன்னது பொய்!
பலராமன் விஷயத்தைச் சொன்னான்
© JINGLE BELL CREATIONS
சிவராமா, இவருக்கு என்ன தண்டனை அளிக்கலாம்? நீயே சொல்!
தெரியாமல் செய்துவிட்டார். மன்னித்து விடுங்கள்.
பிறகு சிவராமனும் பலராமனும் நண்பர்களாயினர்.



வானவியல் வித்தகர்கள்!

உலக அதிசயங்களில் ஒன்று 'பாபிலோனிய தொங்கும் தோட்டம்'. அது உருவான நாடு நாகரிகத்தில் அன்று சிறந்திருந்தது. பாபிலோன் கி.மு. 4000 - 3000 ஆண்டுகளில் உலகின் முதன்மையான நகர் மையமாகவும், முடியாட்சி செவ்வனே நடந்த நாடாகவும் சொல்லப்படுகிறது. இங்கு வாழ்ந்த, 'ஹமுராபி' என்ற மன்னரின் சட்டங்கள் உலகப் புகழ் பெற்றன. 'பாபிலோன்' என்பதற்கு, 'கடவுளின் வாசல்' என்று பொருள். யூப்ரடீஸ், டைக்ரீஸ் என்ற இரு நதிகளுக்கிடையிலான வளமான வண்டல் மண் கொண்ட பூமி. பழைய பாபிலோனியா முன்பு 'பெரோசஸஸ்' என அழைக்கப்பட்டது.

கி.மு. 4000-த்தில், பேரரசர் அலெக்ஸாண்டர் வந்தபோதுதான், மெசபடோமியா, பாபிலோனியா போன்றவை நகர் மயமாக்கப்பட்டன. பாபிலோனியா சிறிய நகரமாக இருந்தாலும்கூட அதனை உலகின் கற்பித்தல் மையமாக மாற்றியவர், ''சட்டம் உருவாக்கியவர்'' எனப் போற்றப்படும் ஹமுராபிதான். பாபிலோனியர்கள், அரசனை 'மார்டுக்' என்ற கடவுளின், முகவராகவே நம்பினர்.

பாபிலோனியாவில் கோவில்கள் அனைத்திலும் நூலகங்கள் இருந்தன. பூசாரிகளும், பெண் பூசாரிகளும், கோவிலைச் சுற்றியுள்ள வளாகங்களிலேயே வாழ்ந்தனர். பாபிலோனி



• ஹமுராபி




• கியூனிஃபார்ம்

யர்கள் எழுத்தில் களிமண்பலகை முறைகளைக் கையாண்டனர். இவர்களும் 'கியூனிஃபார்ம்' எழுத்து முறையை எழுத முயற்சி செய்தவர்கள் என்றே சொல்லப்படுகிறது. இன்று நாம் மெசபடோமியா, பாபிலோனியா பற்றி அறிந்து கொள்வதுகூட, இவர்களால் பாதுகாக்கப்பட்ட எழுத்துமுறைகள் மூலமாகத்தான். இவர்களின் மொழி எதுவென்று சரிவரத் தெரியவில்லை. இவர்களுக்கு முன் ஆட்சி செய்த, 'அக்காடின்' மக்களின் மொழியையே பேசியிருக்கலாம்... அல்லது 'செமிட்டிக்' மொழியாக இருக்கலாம். இது அரேபிய, ஹெப்ரு மொழியுடன் இணைந்து உருவானது.

பாபிலோனியாவில் விவசாயம் செழித்திருந்தது. வண்டல் மண் பூமியல்லவா? இங்கு காட்டு பார்லி, கொண்டைக்கடலை சதுப்பு நில சாப்பிடும் கிழங்கான 'கொங்கை', பேரீச்சை, ஆப்பிள் என வகை வகையான பழங்களும் தானியங்களும், விளைந்தன. இவ்வளவு செழுமையும் வறண்ட, நீரற்ற அரேபியாவுக்கு அருகில் இருந்ததுதான் அதிசயம். இதன் பெருமைகளையும் கிரேக்க ஆராய்ச்சியாளரான 'ஹெரடோடஸ்' சிறப்பாக எழுதி வைத்துள்ளார்:

'தானியங்கள், நிறைய மகசூல் தருகின்றன. சமயத்தில் 3 மடங்கிலிருந்து 15 மடங்குவரை கூட விளைகின்றன. கோதுமை, பார்லி பயிர்களின் இலைகள் 3 அங்குலம் அகலத்துடன் உள்ளன. கம்பு, எள் பயிர்கள், மரம் போல் உயரமாய் வளர்ந்துள்ளன. மத்திய தரைக் கடல் பகுதியை ஒப்பிடும்போது, பாபிலோனிய விளைச்சல் 15 மடங்கு அதிகம்' என தமது நூலில் குறிப்பிட்டுள்ளார்.



• தொங்கும் தோட்டம்

பாபிலோனிய அரசர்கள் இந்தியாவுடன் வாணிபத் தொடர்பு கொண்டிருந்தனர். பாபிலோனியர்களின் கடவுள் 'மார்டுக்'கும் அவரது பாம்பும்தான். மார்டுக்கின் கோவில் 'எஸாகிலா' மிகவும் பெருமை பெற்றது. இந்த கால கட்டத்தில் ஹமுராபி, 'சட்டம்' இயற்றினார். அச்சட்டம் இன்றுவரை பாதுகாக்கப்பட்டு வருவதுடன், அதுவே உலகின்



முதல் சட்ட வரைமுறை என்றும், சிறந்த சட்டமுறை என்றும் போற்றப்படுகிறது.

கல்வி, சட்டம், அறிவியல் நூலகம், நாகரிகம், விவசாயம் போன்ற அனைத்து விஷயங்களிலும் பாபிலோனியர் சிறந்து விளங்கினர். எனவே உலகம் பாபிலோனில் உருவாக்கப்பட்டது' என்று சொல்லப்படுகிறது.


அவர்களின் இதிகாசத்தில் பாபிலோன் அண்டத்தின் மையத்தில் உள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. எழுத்தின் கடவுளான நபு, சாமாஸ் என்ற சூரியக் கடவுள், இஸ்டார் என்னும் காதல் கடவுள், இனானா எனப்படும் போர்க் கடவுள்... என பலவகை கடவுள்களை பாபிலோனியர் வழிபட்டனர்.

கோவில்கள் கலை உருவாக்கத்துடன் இருந்தன. மனிதத் தலையுடைய எழுத்து உருவங்களும் காணப்பட்டன. இவர்களின் 'அசிட்டு' புத்தாண்டு விழா, கி.பி. 300 வரை, சிரியாவில் கொண்டாடப்பட்டது. மக்கள் உலோகப் பொருள்கள், கண்ணாடி, துணி நெய்தல் போன்றவற்றைச் செய்தனர். இவர்களின் காலம் 'வெண்கல காலம்' எனப்பட்டது. தாமிரம் வெண்கலம், தங்கம், வெள்ளி, இரும்பை பயன்படுத்தினர்.

பாபிலோனியர்களின் புதிய கண்டுபிடிப்பில் அருமையானது வானவியல் தான். வெள்ளி கோள் பற்றி எழுதியுள்ளனர். விண்மீன்கள் மூலம், நாட்காட்டி உருவாக்கி உள்ளனர். கி.மு. 8ம் நூற்றாண்டிலேயே, இவர்கள் கிரகத்தைக் கணிப்பதில் கைதேர்ந்தவர்களாக இருந்தனர். கிரகணம் நாட்டைப் பிடிக்க வந்த கெட்ட தேவதைகள் என நம்பினர். இது நாட்டுக்கு அபாய /சோதனைக் காலம் என அறிவித்தனர். அந்த காலத்திற்கு மட்டும் மாற்று அரசரை ஏற்பாடு செய்து, பழைய அரசரைப் பாதுகாப்பாக வைத்தனர்!

பாபிலோனியர்கள் கணிதத்தில் தலை சிறந்தவர்கள். இருவகை எண் முறைகளைக் கையாண்டனர். ஒன்று கிரகணம் கணிக்க மற்றொன்று அபாய காலம் கணிக்க! இவர்கள் 60 என்ற எண்ணை அடிப்படையாகக் கொண்ட எண்முறையைப் பின்பற்றினர். 60 நொடி = ஒரு நிமிடம்; 60 நிமிடம் - 1 மணி = 24 மணி - 1 நாள்; 365 நாட்கள் = 1 வருடம் என்ற முறையும், வட்டம் என்பது 360° உள்ளது என்பதும் பாபிலோனியர்களின் உருவாக்கமே.

பாபிலோன் செல்வ வளம் மிக்க நகரம். இதன் தொங்கும் தோட்டம் பற்றி ஆயிரக்கணக்கான கதைகள் உலவுகின்றன. இது கட்டடக் கலையின் வித்தகத் திறனைக் காட்டுகிறது. இரண்டாம் 'நெபுசாட் நெஸ்ஸார்' ஆட்சிக்காலத்தில்



• சித்திரங்கள்

உலக மக்களை, பயணிகளை ஈர்க்க, இந்த அதிசய தோட்டம், உருவாக்கப்பட்டதாக சொல்லப்படுகிறது. இதன் சுற்றுச் சுவர்கள் 5 மைல் நீளமும், 80 அடி கனமும், 320 அடி உயரமும் உடைய தாம். உள்ளே தங்க விக்கிரகங்கள் உள்ளனவாம். இரண்டாம் நெபுசாட் நெஸ்ஸார், தம் ராணியை தாய்வீட்டுக் கவலையிலிருந்து மீட்க, அவரது தந்தை ஊர் போல பாபிலோன் நகரை நீர்வீழ்ச்சிகள் நிறைந்த மலைத் தோட்டமாக மாற்றியதாகச் சொல்லப்படுகிறது. ○






சு.மிருணாளினி,
இரண்டாம் வகுப்பு, ரு.க.வி.பள்ளி,
குனியமுத்தூர்


உங்கள் கைவண்ணம்!

க.ராம்குமார்,
ஒன்பதாம் வகுப்பு,
அரசினர் உயர்நிலைப்
பள்ளி,
அரித்துவாரமங்கலம்




கோ.ராகுல்வாசன்,
டி.ஏ.வி. சீனியர் செகண்டரி பள்ளி,
சென்னை - 50




கு.கார்த்திகேயன்,
ஏழாம் வகுப்பு,
பரணி பார்க் மெட்ரிக் பள்ளி, கரூர்

சச்சின் நாகராஜன்,
ஒன்றாம் வகுப்பு,
செயின்ட் பிரிட்டோ அகாடமி,
சென்னை - 42




சி.லோகேஷ், ஆறாம் வகுப்பு,
சின்னசாமி அம்மாள் நகராட்சி
உ.நி.பள்ளி, திருப்பூர்

கொக்கு மாமா

கோகுலத்தின் சிறப்பாசிரியராக இருந்தவர். வள்ளியப்பாவின் சீடர். இதுவரை சிறுவருக்காக 85 நூல்களை எழுதியுள்ளவர். மத்திய அரசினரின் விருது பெற்றவர்.

ஈ.ரோடில் மகாஜன் ஆரம்பப் பள்ளியில் (இப்பொழுது மகாஜன் கல்லூரி) மூன்றாவது படித்துக் கொண்டிருந்தேன். பெரியசாமி தூரன் போன்ற அறிஞர்கள் படித்தது இதில்தான்.



ஆங்கிலம், தமிழ், இயற்கை என்ற மூன்று பாடங்கள் மட்டுமே. தவிர கைத்தொழில், பொழுது போக்கு, விளையாட்டு என்ற மூன்றும் கட்டாயம். விளையாட்டு வகுப்புக்கு பெரிய மைதானம் கிடையாது. தெருக்களில் இப்போதிருப்பதைப்போல் மூச்சு முட்டும் போக்குவரத்து இருக்காது. அதனால் தெருவையே மடக்கி நொண்டி விளையாடுவோம்.

இரண்டு பிரிவுகளாகப் பிரிந்து கொள்வோம். பூவா தலையா போட்டு எந்த அணி நொண்டியடித்து அவுட் செய்ய வேண்டும் என்று முடிவு செய்து கொள்வோம். இருபது பேர் ஓர் அணியில் என்றால் எதிரணியில் இருப்பவர்கள் ஒவ்வொருவராக நொண்டியடித்து எதிரணியினரைத் தொட்டு அவுட் செய்வார்கள். இட முழங்காலை மடித்துக் கொண்டு வலக் காலால் நொண்டியடிப்போம். மண் தரையில் வளைந்து வளைந்து நொண்டியடித்து எதிராளியை அவுட்டாக்கும் முயற்சியில் கால் வலி கண்டுவிடும்.

நொண்டியடிக்கையில் முழு உடலும் குலுங்கிக் குலுங்கி ஆடுவதால் எல்லா உறுப்புகளுக்கும்- குறிப்பாக, கணுக்காலுக்குச் சரியான பயிற்சி. காலைத் தரையில் வைத்துவிட்டால் அவுட். அதே அணியில் அடுத்தவன் நொண்டியடித்து வருவான். உடம்பு சரியில்லை என்று பாட வகுப்பைத் தவிர்ப்பவர்கள்கூட விளையாட்டு வகுப்புக்கு வந்துவிடுவார்கள். அவ்வளவு உற்சாகமாக இருக்கும். இதற்கு 'நொண்டி நொண்டி நொடிச்சுக்கோ, வெல்லம் தரேன் கடிச்சுக்குகோ' என்று ஒரு பாட்டுகூட உண்டு. இதைப் பாடிக் கொண்டே நொண்டியடித்துப் பிடிக்க வருபவனுக்கு பாச்சா காட்டுவார்கள்.

என்னுடன் அப்பொழுது படித்த நடராஜன் என்ற நண்பன் விந்தி விந்தி

ரேவதி


நடப்பவன். அவன் மனம் நோகுமே என்று நான் அந்தப் பாட்டைப் பாடமாட்டேன். விளையாட்டாசிரியர் இதற்காக ஒருமுறை என் காதைப் பிடித்திழுத்து 'பாடிக்கொண்டே ஆடினால்தான் உற்சாகமா இருக்கும். பாடுடா' என்றார். அப்படியும் நான் பாடவில்லை. ஆசிரியர் கையை நீட்டச் சொல்லி பிரம்பால் அடித்தார். இதற்குள் நடராஜனே எழுந்து காரணத்தைச் சொல்லிவிட, ஆசிரியர் அசந்து போனார். அந்தப் பாட்டை யாரும் பாடக்கூடாது என்று அவரே உத்தரவு போட்டு, அதற்குப் பதிலாக 'கொக்கு மாமா காலை மடி, கிட்ட வந்தேன் என்னைப் பிடி' என்று புதுப் பாட்டை எழுதிக் கொடுத்தார். பள்ளி முழுவதும் அந்தப் பாடல் பிரபலமானது.

சைக்கிள் அறிமுகமாகியிருந்த காலகட்டம். கிரிக்கெட்டும் பிரபலமாகாத காலம். நடக்கத் தயங்காத காலம். மூங்கில் பத்தையை வளைத்துக் கட்டி அதில் துணியையோ வைக்கோல் பிரியையோ சுற்றிக்கட்டித் தெருக்களில் கூட்டங்கூட்டமாகச் சக்கரம் ஓட்டி விளையாடுவோம். பெரும்பாலும் எல்லாத் தெருக்களிலும் சுற்றிச்சுற்றி வருவோம். இதற்கும் பாட்டு உண்டு. மேலும் கொடி கொடியாய் முந்திரிக்காய், பச்சைக் குதிரை, திருடன் - போலீஸ், காற்றாடி என்று பல விளையாட்டுக்களை விளையாடுவோம்.

எல்லாமே வியர்வை சிந்தும் விளையாட்டாக ஆரோக்கியமளிக்கும்படிதான் இருக்கும். சில நாட்களில் மைதானத்தில் அரசியல் கூட்டங்கள் நடக்கும். அதனால் விளையாட முடியாது. அந்த மாதிரி நாட்களில் முனிசிபல் கோர்ட் மைதானத்தில் சுவர் ஏறிக் குதித்து விளையாடுவோம்.

ஒவ்வொரு விளையாட்டிலும் உடம்புக்கு வலுவூட்டும் ஏதாவது பயிற்சி இருக்கும். ஒருவருக்கொருவர் சார்ந்து வாழ்ந்து மகிழவைத்த விளையாட்டுகள்.

கொக்கு மாமா!





கருகருவென்று இருட்டிக் கொண்டு வந்த நேரம் பாஸ்கர் வீட்டுக்குள் ஓடி வந்து விழுந்தான். அவன் முகமெல்லாம் வியர்வை.

''என்னடா ஆச்சு? ஏண்டா ஒடம்பெல்லாம் நடுங்குது?'' என்று கேட்டார் பாட்டி.

''பே... பே... பேயி, பாட்டி'' என்று நடுங்கிக் கொண்டே கூறினான்.

''எங்கேடா பேயைப் பார்த்தே?'' என்றபடி பேரனுக்குப் பக்கத்தில் அமர்ந்தாள் பாட்டி.

''அதுதான் பாட்டி. நம்ம வயலுக்குப் போற இட்டறைப் பாதையில உள்ள ஒத்தப்புளிய மரத்தில பார்த்தேன்.''

இட்டறைப் பாதை என்பது இரண்டு பகுதி நிலங்களுக்கு இடையே வேலியடைத்து, ஒரு மாட்டு வண்டி செல்வதற்குரிய வண்டிப்பாதை. பகல் நேரத்தில்கூட இருள் சூழ்ந்ததைப் போல இருக்கும். அந்த இட்டறைப் பாதையில் புளிய மரமும், பனை மரங்களும் சூழ்ந்திருக்கும்.


''அங்க ஏண்டா போய்த் தொலஞ்சே?''

''அப்பாதான் வெளியூரு போறதாச் சொல்லி மாடுகளைக் கொண்டு வரச் சொல்லுச்சு. அதுக்குத்தான் போனேன். வரும்போது இருட்டிருச்சு.''

''பிசாச நேர்ல பார்த்தியா? எப்படி தம்பி இருந்துச்சு?'' என்றார் அடுத்த வீட்டுப் பெண்மணி.

''புளிய மரத்து வாதுல ரெண்டு பக்கமும் காலைத் தொங்கப் போட்டுக் கிட்டுப் பம்பைய விரிச்சுப் போட்டுக் கிட்டுக் கன்னங்கரேல்னு உட்கார்ந் திருந்துச்சு. நான் பார்த்த உடனே ஓடி வந்துட்டேன்'' என்றான் பாஸ்கர்.

''செத்துப் போன நாச்சாம் பயதான் இந்த மாதிரி பயமுறுத்தறான். மறிச்சுக் கட்டச் சொன்னா யாரும் செய்ய மாட்டேங்கறாங்க''



எஸ். வினோத்

என்றார் பாட்டி.

"மறிச்சுக் கட்டுறதுன்னா என்ன பாட்டி?" என்று கேட்டான் பாஸ்கர்.

"மந்திரவாதியக் கூட்டிவந்து மந்திரம் செபிச்சுப் பிசாச இயங்க விடாமக் கட்டிப்போடுறது" என்று பாட்டி கூறிக் கொண்டிருக்கும்போதே அம்மன் கோயில் பூசாரி வந்து சேர்ந்தார்.

விபூதியை எடுத்துத் தன் இட உள்ளங்கையில் வைத்துப் பரப்பினார். ஒரு துரும்பை எடுத்து அதில் ஏதோ எழுதினார். பிறகு தன் வாய்க்குள் எதையோ, 'முணுமுணு'வென்று முனகி, விபூதியை பாஸ்கர் தலையில் போட்டார். பிறகு நெற்றியில் பூசிக் கொள்ளச் சொன்னார். மீதமிருந்த விபூதியை ஒரு பேப்பரில் மடித்துக் கொடுத்து இரவில் தலையணைக்குக் கீழே வைத்துப் படுக்கச் சொன்னார்.

"என்ன பூசாரி ஐயா, பார்வையில என்ன தெரியுது?" பாட்டி கேட்டார்.

"ஏதோ ஒரு எச்சிப் பிசாசு தொட்டிருக்கு, கவலைப்பட வேண்டாம்.

புளிய மரத்துப் பேய்





''செத்துப் போன நாச்சாம் பயதான் இந்த மாதிரி பயமுறுத்தறான்.''

விபூதி போட்டாச்சுல... எந்தப் பிசாசா இருந்தாலும் 'போறேன் போறே'ன்னு போயிடாதா என்ன?'' என்றார்.

எங்கோ சென்றுவிட்டுத் திரும்பிக் கொண்டிருந்த பாஸ்கரின் நண்பன் பழனிச்சாமி பாஸ்கர் வீட்டு முன்னால் கூட்டமாக இருப்பதைப் பார்த்து உள்ளே வந்தான்.

''என்னடா பாஸ்கர்? என்ன ஆச்சு? ஏன் எல்லாரும் கூடியிருக்காங்க?'' என்று கேட்டான்.

''இட்டறைப் புளிய மரத்தில பிசாசு இருந்ததைப் பார்த்துட்டுப் பயந்து ஓடி வந்திருக்கு புள்ளே. அதுதான்...'' என்றார் பாட்டி.

''ஏம்பாட்டி இப்படிக் கதையளக் குறீங்க? பாஸ்கருக்குக் கதை சொல்றேன். கதை சொல்றேன்னு பிசாசுக் கதையாச் சொல்லி அவனைக் கோழையாக்கிப்புட்டீங்க'' என்றான் பழனிச்சாமி.

''இவன் ஒருத்தன்... ஊரு ஒலகத்துல இல்லாததையா சொல்லிப்புட்டேன். இப்பக் கூட பூசாரி வந்து திருநீறுப் பார்வை பார்த்து பிசாசுதான் அரட்டியிருக்குன்னு சொன்னாரு'' என்றார் பாட்டி.

''ஏம்பாட்டி பூசாரி சொல்லிப்புட்டாருங்கிறே? நீ எப்பவாவது பிசாசப் பார்த்திருக்கியா?'' என்றான் பழனி.

''நான் பார்த்ததில்லேப்பா. பார்த்ததா எல்லாரும் சொல்றாங்கல்ல.''

''இப்படித்தாம் பாட்டி அவங்க சொன்னாகம்பீங்க அவங்களப் போயிக் கேட்டா- எனக்குத் தெரியாது, அவங்க சொன்னாகம்பாங்க'' என்றவன் பாஸ்கரைப் பார்த்து,

''டேய் எழுந்திருடா, நீ பார்த்த பிசாச நானும் பார்க்கணும்'' என்றான்.

''நான் மாட்டேன். அது புளிய மர வாதுல ரெண்டு காலயும் தொங்க விட்டுப் பம்பய விரிச்சுப் போட்டுக் கிட்டுக் கன்னங்கரேர்னு உட்கார்ந்திருக்கு. நான் வரமாட்டேம்பா'' என்றான் பாஸ்கர்.

''பயப்படாதே. நான் இருக்கேன்ல. பேயி வந்தா நாலு கராத்தே குத்து. பயப்படாம வா'' என்று இட்டறைப் பாதைக்கு இழுத்து வந்துவிட்டான். கையில் டார்ச் லைட் பின்னாலேயே பாட்டியும் இன்னும் சிலரும் வந்து சேர்ந்தனர்.

புளிய மரம் தன்னந்தனியாகக் காற்றில் அசைய பனை மரங்களும் சரசர வெனக் காற்றில் அசைந்து கொண்டிருந்தன. பழனிச்சாமி மின் பொறி விளக்கொளியைப் புளிய மரத்தில் பாய்ச்சினான்.

அதோ பாரு... காலைத் தொங்கப் போட்டுக்கிட்டு இருக்கு'' என்றான் பாஸ்கர். கூர்ந்து பார்த்த பழனி, பாஸ்கரின் அறியாமையை எண்ணி மனத்துக்குள் சிரித்துக் கொண்டான்.

''நான் போய் அந்தப் பிசாசைப் பிடிச்சுட்டு வரேன்'' என்ற பழனிச்சாமி புளிய மரத்தை நெருங்கினான்.

''பம்பய விரிச்சுப் போட்டுக் கிட்டுக் கன்னங் கரேல்னு உட்கார்ந் திருக்கு.''



மரத்தில் ஏறி கிளையில் வாகாக அமர்ந்திருந்த பிசாசை இழுத்தான். அது சரசரவென்ற சத்தத்துடன் கீழே விழுந்தது.

பிறகு மரத்தைவிட்டுக் கீழே இறங்கி பிசாசைத் தூக்கித் தோளில் வைத்துக் கொண்டு, பாஸ்கரும், மற்றவர்களும் நின்ற இடத்திற்கு வந்து ''டேய் பாஸ்கர்... இந்தா, நீ பார்த்த பிசாசு'' என்றபடி ஓலை மட்டையைக் கீழே போட்டான்.

''என்னடா... கதைவிடுறியா? பிசாசைப் பிடிச்சிட்டு வர்றேன்னு போயி 'கவா' மட்டையைத் தூக்கி வந்து போடுறே?'' என்றார் பாட்டி.

''உம் பேரன் பார்த்த பிசாசு இதுதான். வேணும்னா லைட்டடிச்சுப் பாரு'' என்று மரத்தின் மீது ஒளியைப் பாய்ச்சினான்.

''எங்கடா பழனி நான் பார்த்த பிசாசை இப்பக் காணோம்?''

''நீ பார்த்த பிசாசு இந்தக் கவை ஓலை மட்டைதாண்டா. இது பனை மரத்திலிருந்து விழும்போது புளிய மரக்கிளையில் சிக்கிக் கொள்ள, மட்டைகள் கால்களைப் போலவும், மேலே உள்ள ஓலை பம்பையை விரித்துப் போட்டுக் கொண்டு இருப்பதைப் போலவும் தெரிய, சரியா பார்க்காம, பாட்டி சொன்ன கதைப் பாத்திரத்தைப் போல கற்பனை செஞ்சுக்கிட்டு ஓடி வந்திருக்கே. இப்பப் புரியுதா-பிசாசு பேயின்னு சொல்றதெல்லாம் பொய்யின்னு?'' என்றான் பழனி.



''செத்தவங்க எல்லாம் பிசாசா வருவாங்கன்னு சொல்றாங்களே, அது பொய்யா?'' என்று கேட்டார் ஒரு அம்மா.

''பொய்தான். ஒரு மனிதனை இயக்குவது உயிர்ங்கற காற்று. அது உடலை விட்டு வெளியே போயிட்டா பிணம். அதைப் புதைக்கிறோம்; இல்லேன்னா எரிக்கறோம். உடல் அழிஞ்சு போகுது. காத்தோடு காத்தா இருக்கிற உயிர் எப்படி உருவமா வந்து நம்மை அடிக்கும்?'' என்றான்.

இத்தனை நாட்களாக தங்களைப் பிடித்திருந்த அறியாமை என்ற பேயை விரட்டிய பழனிச்சாமியை அனைவரும் பாராட்டினர்.

புதுமைப் போட்டி பரிசு கூப்பன்

புதுமைப் போட்டி	**நான் கையொப்பமிட்டுக் கோகுலம் போஸ்டரைக் கொடுத்த...**
என் பெயர் :....................................	நண்பர் பெயர் :....................................
வகுப்பு :....................................	வகுப்பு :....................................
பள்ளி :	பள்ளி : ....
....	....
வீட்டு முகவரி :	வீட்டு முகவரி : ....
....	....
....	....
தொலைபேசி (or) E-mail:....................................	தொலைபேசி (or) E-mail:....................................
....	....
	எனது கையொப்பம் : ....

ஓடுக்குள் உலகம்

இந்தியாவில் ராஜஸ்தான் மாநிலத்தில் ஒட்டக சந்தை கூடுவதுபோல, ஸ்பெயின் நாட்டில் ஆண்டுதோறும் நவம்பர் மூன்றாவது வாரத்தில் குதிரைகளுக்கென்ற ஒரு பிரத்யேகமான சந்தை கூடுகிறது. அதில் உலகின் பல பாகங்களிலிருந்து உயர் ரக குதிரைகள் பங்கேற்கின்றன. குதிரைகளை வாங்குவதற்காகவும், பார்த்து ரசித்து மகிழ்வதற்காகவும் சுமார் ஒன்றரை லட்சம் பேர் இந்த சந்தைக்கு வருகிறார்கள். ஒரு கட்டத்தில் ஐரோப்பாவில் உயர் ரக குதிரைகளின் எண்ணிக்கை ஒரு பயங்கரமான தொற்று நோய் காரணமாய் குறைந்துவிட, அவற்றை அதிகரிக்கும் நோக்கத்துடன் சுமார் பதினைந்து வருடங்களுக்கு முன்பு, ஆரம்பித்த இந்த குதிரை சந்தையின் புகழ் ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது.



* சிவானி

படம் : பொள்ளாச்சி சுந்தரம்

அரசியல் பள்ளிக்கூடம்!

உலகில் உள்ள பின் தங்கிய நாடுகளில் இருக்கும் குழந்தைகளுக்கும் கம்ப்யூட்டர் பாடம் சொல்லித்தர வேண்டும், அவர்களும் கம்ப்யூட்டரைப் பயன்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன், விலை குறைவான கம்ப்யூட்டர் ஒன்றை உருவாக்கும் பணி நடைபெற்று வருகிறது. ஏழரை அங்குலம் மானிட்டர் திரை கொண்ட, எங்கே சென்றாலும் கையோடு எடுத்துச் செல்லும் வகையில் இந்த 'லேப் டாப்' ரக கம்ப்யூட்டர் உருவாக்கப்படுகிறது. ''ஒரு குழந்தைக்கு ஒரு லேப்டாப் கம்ப்யூட்டர்' என்ற சிறப்புத் திட்டத்தின் கீழ் தயாரிக்கப்படும் கம்ப்யூட்டரின் விலை சுமார் ஏழாயிரம் ரூபாய் ஆகிறது. அதிக எண்ணிக்கையில் உற்பத்தி தொடங்கும்போது, விலை நாலாயிரம் ரூபாயாகக் குறையும் வாய்ப்பு இருக்கிறதாம். இந்த வகை

எஸ். சந்திரமௌலி

கம்ப்யூட்டர்கள் 2008ஆம் ஆண்டில் மார்க்கெட்டுக்கு வந்துவிடுமாம்!

வண்ணத்துப் பூச்சிகள் சிறகடித்துப் பறந்து செல்வதைப் பார்ப்பதற்கு எத்தனை சந்தோஷமாக இருக்கும். கர்நாடக மாநிலத்தில், பன்னர்கட்டா தேசியப் பூங்கா இருக்கிறது. அங்கே வண்ணத்துப் பூச்சிகளுக்கென்று ஒரு பிரத்யேகமான பூங்கா உருவாக்கப்பட்டிருக்கிறது. ஏழரை ஏக்கர் பரப்பில் அமைந்துள்ள இந்த வண்ணத்துப் பூச்சி பூங்காவின் உள்ளே சுமார் பத்தாயிரம் சதுர அடி பரப்பளவில் பிரம்மாண்டமானதொரு கண்ணாடியிலான அரைக் கோள வடிவ 'பசுமை இல்லம்' ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இதனுள்ளே ஏராளமான செடி, கொடி வகைகள் இருக்கின்றன. அவற்றில் பூத்துக் குலுங்கும் மலர்களில் தாவிப் பறந்து, பார்வையாளர்களின் கண்களுக்கு அரிய விருந்து வழங்கிக் கொண்டிருக்கின்றன ஆயிரக்கணக்கான வண்ணத்துப் பூச்சிகள்.



ஜார்கண்ட் மாநிலத்தில் உள்ள ராஞ்சியில் ஒரு பள்ளிக்கூடம் இருக்கிறது. பெயர் 'நேதாகிரி வித்யாலயா, இது சாதாரணமான பள்ளிக்கூடம் இல்லை. அரசியலில் ஈடுபட விரும்புகிறவர்களுக்கு, அதற்கான பாடங்களைச் சொல்லிக் கொடுக்கும் பள்ளிக்கூடம். 'ராஜ ரஞ்சன்' என்பவர் இந்தப் பள்ளிக் கூடத்தை நடத்தி வருகிறார்.

''அரசியல், சரித்திரம், பொருளாதாரம், சமூகவியல், உளவியல் போன்ற பாடங்கள் சொல்லிக் கொடுக்கிறார்கள். இந்தப் பள்ளியில் நடத்தப்படும் மூன்று மாத அரசியல் அரிச்சுவடி பயிற்சியில் சேர்ந்து படிக்க ஐம்பது ரூபாய் சேர்க்கைக் கட்டணமாக செலுத்த வேண்டும் அவ்வளவுதான். வித்தியாசமான பள்ளிதான்!








''தீபா! நிலாவுல தண்ணீர் இருக்குமா?''

''எண்ணெய் இருக்கும்டி. என்னா பாட்டி வடை சுடுறாங்களே!''

- எஸ்.மோகன், அருப்புக்கோட்டை



வால் எப்படி

''நாய் வாலைப் பிடிச்சு இழுக்காதேடா. அது கடிக்கும்.''

''வால் எப்படிடா கடிக்கும்?''

- ஆ.விஜயலக்ஷ்மி, திருச்சி



''என் பேர் பாபு, நல்ல பேர் தானே சார்?''

''ஆமாம். அதிலென்ன சந்தேகம்?''


''பின்னே எதுக்கு சார், படிச்சு நல்ல பேரை வாங்குன்னு சொன்னீங்க.''

- ஆர்.தங்கராஜ், திருப்பூர்


''ஏன் ஒரு வாரமாக குளிக்காமல் இருக்கிறாய்?''

''அடுத்த மாதம் குற்றாலம் போகிறோமே...''

- எஸ்.மோகன்







''யாராவது என்னைத் திட்டினா நான் உடனே அழுதுடுவேன். நீ?''

''உன்னைத் திட்டினதுக்காக நான் ஏன் அழணும்?''

- ஆ.விஜயலக்ஷ்மி



ழிக்கும்?

''டேய் ராஜா. பேசக் கூடாதுன்னு எத்தனை முறை சொன்னேன்.''

''சரியா எண்ணலையே, டீச்சர்.''


- எச்.அஜிரா



''தினமும் ஸ்கூலுக்கு லேட்டா வர்றியே, உன் பேர் என்ன?''

'''சுலோ'சனா டீச்சர்.''

- ஆர்.தங்கராஜ்,



புஜ்ஜி

கருத்து, படம்: பிள்ளை





படம்: பொள்ளாச்சி சுந்தரம்

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN / CC (S) DN / 109 / 06 - 08 * Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN / CC (S) DN / 47 / 06 - 08 * Registered as a Newspaper in Srilanka

